★ சேட்டிங்
★ சூட்டிங்
★ சாறீஸ்
★ பிளவுஸ்பீஸ்
வகைகளுக்கு
ஞானம் ஆடையகம்
54, சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கோவில் தேவைகளுக்குரிய
★ குடை ★ கொடி
★ ஆலவட்டம்
★ வாகுமான்
என்பவற்றுக்கு
ஞானம் ஆடையகம்
54, சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 19 வியாழக்கிழமை (02 – 02 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily | கதிர் 67

# சமாதானப் பேச்சுவார்த்தை இடை நிறுத்தப்படமாட்டாது

## தொடர்ந்து நடக்கும் என்கிறார் அமைச்சரவை பேச்சாளர் தர்மசிறி

கொழும்பு, பெப்ரவரி 2

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சமாதானப் பேச்சுக்கள் இடை நிறுத்தப்படமாட்டா. அவை தொடர்ந்து நடைபெறும்.

இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார் அமைச்சரவைப் பேச்சாளரான தர்மசிறி சேனநாயக்கா.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிப்பதற்காக நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அரசு-விடுதலைப் புலிகள் சமாதான முயற்சி தொடர்பாக செய்தியாளர்கள் சரமாரியாக கேள்விகளைத் தொடுத்தனர்.

அவற்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்ததா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சின் பின்னால் சகோதரர்கள்...

கொழும்பு, பெப். 2

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள், ஞானக்கோன் சகோதரர்களின் மத்தியஸ்த முயற்சி மூலமே ஆரம்பிக்கப்பட்டன.

இந்தத் தகவலை ''சண்டே ரைம்ஸ்'' வார இதழில் அதன் அரசியல் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த ஞானக்கோன் சகோதரர்கள் சிங்கப்பூரிலும் லெரஸ்ஏன் ஜெல்ஸிலும் வசித்து வருகின்றனர்.

கப்பல் போக்குவரத்து தொடர்பான வர்த்தகத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## காவலரண், பங்கர்கள் அமைப்பதில் கிழக்கில் படையினர் வெகு தீவிரம்!

### மக்கள் மத்தியில் சந்தேகமும் பீதியும்

கொழும்பு, பெப். 2

அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் இடைநிறுத்தம் நான்காவது வாரத்தை எட்டியுள்ள நிலையில் —

திருமலை, மட்டக்களப்பு பகுதிகளில் இராணுவத்தினரும், பொலீஸாரும் தமது காவலரண்களைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே தாங்கள் அமைத்திருக்கும் பதுங்கு குழிகளையும், காவலரண்களையும், பலப்படுத்திவரும் படையினரும், பொலீஸாரும் புதிதாக மேலும் பதுங்கு குழிகளை அமைப்பதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலீஸாரினதும், படையினரதும் இந் நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் பலவித சந்தேகங்களையும் பீதியையும் ஏற்படுத்தியிருப்பதாகவும் அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கொழும்புக்கு கப்பல் மூலம் கருவாடு அனுப்ப ஏற்பாடு

### பாதுகாப்பு இணைப்புக் குழு அனுமதி

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ். மாவட்டத்தில் இருந்து கொழும்புக்கு கப்பல் மூலம் கருவாடு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் —

கப்பல் மூலம் எடுத்துச் செல்ல பாதுகாப்பு இணைப்புக் குழு அனுமதி வழங்கியுள்ளதாகவும் — யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து நேற்று யாழ்ப்பாணம் திரும்பிய அரச அதிபர் திரு க. பொன்னம்பலம் இது தொடர்பாக கொழும்பில் பல அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி இருந்தார்.

யாழ்ப்பாணத்தில் அதிகளவு மீன் கிடைப்பதை அடுத்து— பருத்தித்துறையில் இருந்து கப்பல் மூலம் கருவாட்டை கொழும்புக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் —

கப்பல் மூலம் அனுப்ப பாதுகாப்பு இணைப்புக்குழு உட்பட ஏனைய அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளதாகவும் — அரச அதிபர் தெரிவித்தார்.

பருத்தித்துறையில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளின் மேற்பார்வையில் கப்பலில் கருவாடு ஏற்றும் பணிகள் நடைபெறும் என்றும்—

[ 6ஆம் பக்கம் பார்க்க]

## தீர்வு முயற்சியில் பின்னடித்தால் கூட்டணி ஆதரவை வாபஸ் பெறும்

### அரசுக்கு பரராஜசிங்கம் எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு, பெப். 2

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணும் முயற்சியில் இருந்து அரசு பின்வாங்குமானால் அரசுக்கு வழங்கி வரும் ஆதரவை தமிழர் விடுதலைக் கூட்டணி விலக்கிக் கொள்ளத் தயங்காது.

தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினரான திரு. ஜோசப் பரராஜசிங்கம் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

சித்தாண்டி மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த ஞாயிறன்று நடந்த ஒரு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் தேர்தலில் மக்கள் கொடுத்த ஆணைப்படி இனப்பிரச்சினையத் தீர்ப்பதற்கான முன் முயற்சியை எடுத்தது.

அதனால் நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்பட்டது.

இனப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகளுக்கு ஒத்து

[6 ஆம் பக்கம் பார்க்க]

## விஜேவீர கொலை பற்றி விசாரணை; அரசிடம் கோருகிறது ஜே. வி. பி.

கொழும்பு, பெப். 2

ஜே. வி. பி. தலைவர் றோகண விஜேவீரா, பொதுச் செயலாளர் உபதிஸ்ஸ கமநாயக்கா ஆகியோரின் கொலைகள் குறித்து அரசாங்கம் விசாரணை நடத்த வேண்டும்.

இவ்வாறு கோரும் சுவரொட்டிகளை ஜே. வி. பி. இயக்கத்தினர் நாட்டின் பல பகுதிகளிலும் ஒட்டியுள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கை என்ற பேரில் பொதுமக்களைக் கொன்றவர்கள் மீதும் விசாரணை நடத்தி அவர்களைத் தண்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஜே.வி.பி. இயக்கம் கோரியுள்ளது.

ஜே.வி.பி. இயக்கம் அரசாங்கத்துக்கு எதிராக மிகப் பெரிய அளவிலான சுவரொட்டி இயக்கம் ஒன்றை நடத்தி வருவதாகப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பொ.ஐ.மு அரசு பதவிக்கு வந்த பின்னர் அதற்கு எதிராக மிகப் பரந்த அளவில் நடத்தப்படும் மிகத் தீவிர சுவரொட்டி இயக்கம் இதுவே என்றும் அவை வர்ணித்தன.

சுவரொட்டிகளை ஒட்டியதாக ஆனமடுவ பகுதியில் நால்வரைப் பொலீஸார் கைது செய்திருந்தனர். எனினும் அவர்கள் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

ஜே.வி.பி.யின் சுவரொட்டி இயக்கத்தில் —

சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதும் —

தொழில் தகராறுகளைத் தடுப்பதற்கென உருவாக்கப்பட்ட விசேட பொலீஸ் பிரிவுகளை கலைக்க வேண்டும் என்பதும் — முக்கிய கோரிக்கைகளாக உள்ளன.

## இரு மீனவரும் விடுதலை

குருநகர் கடற்பகுதியில் நேற்று முன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இரு மீனவர்களும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

நாவாந்துறையைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை ஜெபராஜ் [19 வயது], சூசைதாசன் அன்ரனி குருஸ் [19 வயது] ஆகிய இருவருமே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

விடுதலை செய்யப்பட்ட இவ்விரு மீனவர்களும் காங்கேசன்துறையிலிருந்து பருத்தித்துறைக்கு கப்பலில் அழைத்து வரப்பட்டனர். [ஒ-173]

முச்சந்தி முரளி



உவை எந்தளவு பாதுகாப்பை செய்தாலும் அடிவிழும்போது விட்டிட்டு ஓடுறவை தானே...!

## ஆஸ்திரேலிய பிரமுகர்கள் யாழ். வருகை

யாழ்ப்பாணம், பெப், 2

ஆஸ்திரேலியாவில் உள்ள ''வொலண்டியர்ஸ் எபிரோட்'' என்ற அமைப்பின் வெளிநாட்டு சேவைச் சபையைச் சேர்ந்த இருபிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

அந்த அமைப்பின் தெற்காசியப் பிரிவுக்கான முகாமையாளர் டேவிட் பேர்த், திட்டமிடல் அதிகாரி ஹல்லாறி சுமித் கியூ என்ற இரு அதிகாரிகளுமே நேற்று யாழ் வந்து சேர்ந்தனர்.

விடுதலைப்புலிகள் பிரதிநிதிகளை நேற்றிரவு அவர்கள் சந்தித்தனர். யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளை இன்று சந்திக்கவுள்ளனர். (ஐ-3)

## மாவுடன் ஹபரண கப்பல் மீண்டும் வரும்

வடமராட்சி, பெப். 2

பருத்தித்துறை துறைமுகத்தில் மா இறக்கி முடிக்கப்பட்டதை அடுத்து 'ஹபரண' கப்பல் நேற்று திருகோணமலைக்குப் புறப்பட்டுச் சென்றது

திருகோணமலையில் இருந்து மேலும் ஒருதொகுதி மாவை ஏற்றிக்கொண்டு இக் கப்பல் சில தினங்களில் மீண்டும் பருத்தித்துறையை வந்தடையும். (ஓ 173)

## முஸ்லிம் வர்த்தகர் கடத்தப்பட்டார்

கொழும்பு, பெப். 2

வாழைச்சேனையைச் சேர்ந்த முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் கொழும்பு புறக்கோட்டையில் இனந்தெரியாத கோஷ்டி ஒன்றினால் கடத்தப்பட்டு பின் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடத்திச் சென்றவர்கள் அவரிடமிருந்து 62 ஆயிரம் ரூபா பணத்தை அபகரித்ததுடன் வெற்றுத்தாள் ஒன்றில் கையொப்பத்தையும் பெற்றுக் கொண்டதாக பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஹமீர் (வயது 34) என்ற அந்த வர்த்தகர் புறக்கோட்டை சென்ரல் வீதியில் சென்றுகொண்டிருந்த சமயம் வான் ஒன்றில் வந்த ஐவர் அவரைக் கடத்திச் சென்றனர். [ஓ-3]

## இரு தரப்பு மோதல் தவிர்ப்புக்கு காலம் நிர்ணயிக்கப்பட வேண்டும்

### அரசுப் பிரதிநிதி ராஜன் ஆசிர்வாதம் கூறுகிறார்

கொழும்பு பெப். 2

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் தவிர்ப்புக்கு ஒரு குறிப்பிட்ட காலம் நிர்ணயிக்கப்பட வேண்டும் — என்று இலங்கை வங்கித் தலைவரும் அரச தரப்புப் பிரதிநிதிகளில் ஒருவருமான ராஜன் ஆசிர்வாதம் கருதுவதாக 'சண்டே ரைம்ஸ்' வார இதழில் அதன் அரசியல் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த குறிப்பிட்ட காலத்துக்குள் இரு தரப்பினரும் பேச்சுவார்த்தையில் குறிப்பிடத்தக்க ஒரு கட்டத்தை அடைய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்களை யாழ்ப்பாணத்தில் நடத்துவது அரசுக்குச் சாதகமான பலாபலன்களைத் தோற்றுவிக்கும் என்றும் —

சர்வதேச அரங்கில் அரசாங்கத்தின் நன் முயற்சிகளுக்கு அது பிரசாரமாக அமையும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

திருமலை - பருத்தித்துறை

## பயணிகள் கப்பல்சேவை அமைச்சுப் பொறுப்பில்

கொழும்பு, பெப். 2

திருகோணமலையில் இருந்து பருத்தித்துறை வரையான பயணிகள் கப்பல் சேவையை இனி கப்பல் போக்குவரத்து, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு பொறுப்பேற்று நடத்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பயணச் சீட்டுக்களை அமைச்சின் அத்தியாவசிய சேவைகள் நாயகம், திருகோணமலை பிரதேச செயலர், யாழ். அரச அதிபர் ஆகியோர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

இந்தக் கப்பல் சேவை கடந்த காலங்களில தமிழ்க்குழு ஒன்றினால் நடத்தப்பட்டு வந்தது தெரிந்ததே. [ஒ-3]

## கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெப். 2

வங்கிகள், மின்சார சபை, தொலைத்தொடர்பு திணைக்களம் ஆகியவற்றை தனியார் மயப்படுத்துவது என்ற அரசின் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த நிறுவனங்களின் தொழிற் சங்கங்கள் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தி வருகின்றன.

கொழும்பில் மூன்று இடங்களில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தப்பட்டன. [ஐ-3-6]

## ஆசிரியருக்கு அதிகரித்த சம்பளம் மார்ச் முதல்!

### கல்வி அமைச்சர் நேற்றுத் தகவல்

கொழும்பு, பெப். 2

அரசாங்க பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான அதிகரிக்கப்பட்ட சம்பளம் மார்ச் மாதத்தில் இருந்து வழங்கப்படும் என்றும்—

ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான சம்பள அதிகரிப்புக்கான நிலுவைத் தொகை மார்ச் மாதச் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படும் என்றும் — கல்வி, உயர் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன நேற்றுத் தெரிவித்தார்.

ஆசிரியர்களுக்கான புதிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. கவின் எம்.பிக்கள் இருவர் இன்று தெரிவாவர்

கொழும்பு, பெப் 2

ஐ.தே.கவின் தேசியப் பட்டியலில் வெற்றிடமாக உள்ள இரு எம்.பி பதவிகளுக்கும் பொருத்தமானவர்களை நியமிப்பது தொடர்பான இறுதி முடிவு இன்று எடுக்கப்படும்.

கட்சியின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறள இத்தகவலை ''லங்கா தீப''வுக்குத் தெரிவித்தார்.

இந்த இரண்டு வெற்றிடங்களுக்கும் மத்திய மாகாண சபை உறுப்பினர் சரத் கொங்கஹே மற்றும் எம். முஸ்தபா ஆகிய இருவருமே நியமிக்கப்பட உள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இராண்ட்பாஸ் குண்டு வெடிப்பில் இறந்த ஜி. எம். பிறேமச்சந்திரா, காமினி விஜேசேகரா ஆகியோரின் இடங்களுக்கே இவர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

இந்த எம்.பி. பதவிகளில் ஒன்று திருமதி ஹேமா பிரேமதாசா அல்லது சஜித் பிரேமதாசாவுக்கு வழங்கப்படும் என்று முன்னர் பலமாக எதிர்பார்க்கப்பட்டது தெரிந்ததே. [அ-ஐ-6]

## யாழ். மக்களின் உணர்வை பிரதிபலிக்கும் விவரணபடம்

### தயாரிக்க சந்திரிகா அனுமதி மறுப்பு

கொழும்பு, பெப். 2

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் ஆரம்பமான பின்னர் யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை நிலை அவர்களின் உணர்வுகள் குறித்த விவரணப்படம் ஒன்றைத் தயாரிப்பதற்கு பவாஹினித் தலைவர் வசந்தராஜா விரும்பினார்.

இதற்காக யாழ்ப்பாணத்துக்கு ரூபாவாஹினி, ரெலிவிஷன் குழு ஒன்றை அனுப்பவும் வசந்தராஜா திட்டமிட்டார்.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இவரது கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டாராம்.

''உங்கள் திட்டம் நல்லதுதான் ஆனால் கொழும்பில் இருந்து கவனிக்க வேண்டியவை நிறைய உள்ளன'' என்று ஜனாதிபதி கூறியதாக ''சண்டே ரைம்ஸ்'' தெரிவிக்கிறது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பனசோனிக் [Panasonic Digital - AV - mixer - WJ / AVE - 5] நிக்கோன் FM - 2 ஸ்ரில் கமரா AE - 1 கனோன் ஸ்ரில் கமரா. MX - 10 பனசோனிக் மிக்ஸர். தொடர்பு: றீகல் வீடியோ, கடற்கரை வீதி, ஈச்சமோட்டை.
[8217]

நல்ல நிலையிலுள்ள மூன்று கோழிக்கூடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: விக்டர் அன்ரனி, இல. 117/2, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
[34954]

## கடல் கோட்டை

செங்கை ஆழியானின் வரலாற்று நாவல் [விலை 70/-] இந்த மாத மலிவு விலை 35/- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (34932)

## காவோலை

செங்கைஆழியானின் புதிய நாவல் 'காவோலை' விற்பனையாகின்றது. விலை 30/-. பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, ஸ்ரீகாந் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம்.
[34933]

## மண்எண்ணெய்

யாழ் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் அவையினால் 2-2-95, 3-2-95 ஆகிய தினங்களில் காலை 9 — மாலை 5 மணிவரை இறுதி வருட மாணவர்களுக்கு 10 லீற்றரும், ஏனைய மாணவர்களுக்கு 5 லீற்றரும் விலை 22/- வீதம் வழங்கப்படும். மாணவர் அவை. [34963]

## தேவை

வீட்டில் வைத்து சிங்களம் கற்பிக்கக்கூடிய அனுபவம் வாய்ந்த ஆசிரியர் தேவை. உடன் தொடர்பு கொள்க: இல. 960, மே/பா உதயன்.
[சி-338]

## மணமகள் தேவை

யாழ். கிறிஸ்தவ 43 வயது, மாதம் 5000/- சம்பளம் பெறும் குடிப்பழக்கமற்ற அரசாங்க உத்தியோகத்தருக்கு 36 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. கடித மூலம் தொடர்பு: இல. 755, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [34955]

## தவறிவிட்டது

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கும், உரும்பிராய் ஞானவைரவர் கோயிலுக்கும் இடையில் கடந்த சனிக்கிழமை ரூபா 12,700/- பணம் தவறிவிட்டது. கண்டெடுத்த கருணை உள்ளம் படைத்தவர் - தந்து உதவவும். சன்மானம் தருவேன். ச. சங்கரப்பிள்ளை, புதுவளவு, நாவலர் பாடசாலையடி, கோப்பாய். [34971]

## வகுப்புக்கள்

Make up and Hair Dressing ஒப்பனைக்கலையும், தலை அலங்காரமும் புதிய வகுப்புக்கள் 6-2-95 திங்கள் ஆரம்பமாக உள்ளன. சேர விரும்புவோர், தொடர்புகொள்ளவும். Yogi Home Science Academy நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.
[34980]

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## கேள்விப் பத்திரம்

## சீருடை வழங்கல்

550 மீற்றர் சாம்பல் நிற சின்தடிக் காற்சட்டை துணி வழங்குவதற்கு தகுதி உள்ளவர்களிடம் இருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்களுடன் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 250/-க்குரிய காசுக்கட்டளையோ அல்லது தபாற் கட்டளையோ இணைக்கப்படுதல் வேண்டும். தபாற் காசுக்கட்டளைகள் நிதியாளர் யாழ். பல்கலைக்கழகம் எனக் குறிப்பிட வேண்டும்.

கேள்விப் பத்திரத்துடன் விண்ணப்பதாரர் குறிப்பிட்டுள்ள விலைக்குரிய துணியின் மாதிரி ஒன்றையும் இணைத்தல் வேண்டும். மாதிரியின் அளவு குறைந்தது 6'' X 6'' ஆக இருத்தல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் சீருடை வழங்குவதற்கான பல்கலைக்கழக கட்டளை கிடைத்த மூன்று கிழமையினுள் பல்கலைக்கழக களஞ்சியத்தில் பொருள்களை விநியோகித்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் நிதியாளர் யாழ். பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 1995 மாசி மாதம் 15ஆம் திகதி பி.ப. 2-30 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவே சமர்ப்பிக்க வேண்டும்.

கிடைக்கப்பெறும் சகல கேள்விப் பத்திரங்களும் 1995 மாசி மாதம் 24ஆம் திகதி காலை 10 மணிக்கு பல்கலைக்கழக சபை அறையில் வைத்து திறக்கப்படும்.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப்-
பல்கலைக்கழகம்.
(சி-477)

---

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்''

யாழ்ப்பாணம்

## அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம்

## நிகழ்ச்சிகள்

**02 – 02 – 1995 வியாழக்கிழமை**
**இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்**

மாலை 5-30 மணி:
அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற மாணவர்கள் — மிருதங்கம்

5-45 மணி:
செல்வன் சி. சாரங்கன் — வீணை
செல்வன் மெ. சஜன் — மிருதங்கம்

6-15 மணி:
செல்வி சுவர்ணலதா கைலைநாதன் — பாட்டு
திரு. ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின்
செல்வன் ச. நாகராஜன் — மிருதங்கம்

7-15 — 8-30 மணி:
திரு. சி. நாகராசா — பாட்டு
திரு ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின்
திரு. து. இராஜன் — மிருதங்கம்

[34956]

---

## A GENERAL ENGLISH COURSE OF STUDY

- A Through BASE in
- Spoken English
- Written English
- Rs. 75 per Month

COMMENCING ON: 06 – 02 – 1995 4·00 p m.

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
16, 3rd CROSS STREET, JAFFNA.
[C·473]

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

O/L
EVENING CLASSES [4-00 TO 6-00]
SAT SUNDAY CLASSES [8 00 TO 2-00]
DAY CLASSES [8 00 TO 2-00]

**புதிய பிரிவுகள் ஆரம்பம்: 05 - 02 - 1995**

விஞ்ஞானம்: திரு. J. R. சூரி
சமூகக்கல்வி: திரு. கோபி
ஆங்கிலம்: திரு. விஸ்வநாதன்
சமயம்: திரு. சங்கர், செங்கா
கணிதம்: திரு. தயாளன்
தமிழ்: திரு. திருப்பதி
திரு. பிரதீபன்
வர்த்தகம்: திரு. கருணாகரன்

[சி-481]

---

இந்து அக்கடமி

## O/L

கணிதம்
புதிய பிரிவு ஆரம்பம்
திரு. ம. ஸ்ரீதரன்
**05·02·95**
Sun. 11–30 a. m.

**YR 8**
ஆரம்பம்:
**04·02·95**
Sat 8-00 a. m.
கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி.

வளாக ஒழுங்கை, திருநெல்வேலி.
(33982)

---

# ஓராண்டு நினைவலைகள்



தோற்றம்: 06 — 01 — 1929
மறைவு: 13 — 02 — 1994

## திருமதி சரஸ்வதி அருணாசலம்

திதி: 1995—02—02

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எம் இதயம்
மீண்டும் வரும் நினைவலையால்
உருகியழும் எம் உள்ளம் எந்நாளும்
உங்களையே தேடுதம்மா
பாருள்ள வரையும் பாசத்தை நாமறவோம்
ஊருள்ளே உந்தன் புகழ் வாழுதம்மா
இரும்பாக்கி எம் மனத்தை வைத்தாலும்
கரும்பான உங்கள் நினைவுகள் தொடருதம்மா
நடமாடிய வீட்டில் இன்று
படமாகி வீட்டீர்கள் அம்மா

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

உசன்,
விடத்தற்பளை,
மிருசுவில்.
(34899)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 23 — 0 — 1907
மறைவு: 04 — 01 — 1995

அமரர்

## வல்லிபுரம் சிவசாமி நடராசா

(வியாபாரியார்)
(அம்மன் கோவிலடி வல்வெட்டித்துறை)

ஐயா! உங்கள் ஆத்மா சாந்தியடைய எம்மோடு உற்றார் உறவினர்களும் பிரார்த்திக்கின்றனர்.

03 – 02 – 1995 வெள்ளிக்கிழமை புலோலி மேற்கு தெனி அம்மன் அந்தியேட்டி மண்டபத்தில் கிரியைகள் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கின்றோம்.


உங்கள் பிரிவால் ஏங்கி நிற்கும்:
ந. சிவரத்தினம் (மகன்)
சி. ஜெயலட்சுமி (மகள்)
ஜெ விஜயலட்சுமி (மகள்)
சி. திலகவதி அம்மா (மகள்)
மு. சிவகுருநாதன் (மருமகன்)
வே. ஜெயச்சந்திரன் ( '' )
அ. சிறிநேதாஜி ( '' )
சி. தயாநிதி (மருமகள்)
சி. சாமந்தி ( பேரப்பிள்ளை )
சி. சங்கீதா ( '' '' )
சி. கஜேந்திரன் ( '' '' )
சி. விஜயந்தி ( '' '' )
சி. லதிஸ்குமார் ( '' '' )
சி. சித்திரா ( '' '' )
சி. அருட்குமரன் ( '' '' )
ஜெ. கஸ்தூரி ( '' '' )
ஜெ. திவ்யா ( '' '' )
சி. தேன்மொழி ( '' '' )
சி. வைஷ்ணவி ( '' '' )
சி. நிதர்ஷன் ( '' '' )

தகவல்:
ம. சந்திரகாந்திலிங்கம் [பேரமகன்]
(யாழ். மாவட்ட சமாதான நீதிபதி)
பருத்தித்துறை.
(34906)

---

6 ஆம் ஆண்டு

# நீங்காத நினைவலைகள்



செல்வன்

## சத்தியேந்திரா தனபாலசிங்கம்

(மருத்துவபீட மாணவன் யாழ். பல்கலைக்கழகம்)

அன்னை மடியில்: **07—11—1965**
ஆண்டவன் சந்நிதியில்: **02—02—1989**


ஆறாண்டு சென்றதய்யா சொர்க்கத்தில் நின் வாழ்வு
சொர்க்கத்தில் வாழாமல் உன் சொந்த இடத்திற்கே வந்திடய்யா
இல்லத்தில் உன்னிடத்தை வெற்றிடமாய் காணுகிறோம்
நடமாடும் இல்லத்தில் உன்நிழல் படத்தை காணுகிறோம்
பாசமிகு மைந்தனே பறந்து வா இவ்வுலகில்
நிதம் நிதம் உன்னினைவால் வருந்துகின்றோம் இவ்வுலகில்
பாவி நான் பெற்றபிள்ளை பறந்து தான் எங்கு சென்றாய்
உன் பாசத்தை காணாமல் உன் உடன் பிறந்தோர்
உறக்கமின்றி தவிப்பதை யாரறிவார்.
பல்லாண்டு சென்றாலும் மறந்திடுமோ உன் திருவுருவை.
ஆண்டவனை வருத்தி உன் ஆத்மா சாந்தியடையவென
வேண்டி நின்று விழிமலர்கள் குளமாக வெதும்புகின்றோம்.

பிரிவால் துயருறும்;
பெற்றோர், சகோதரர், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

56/1, கல்லூரி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(34983)

---

# 31-ம்நாள் நினைவு தினம்



## அமரர் பொன்னையா எங்கரசு

மலர்வு: **16—10—1927**
உதிர்வு: **03—01—1995**

வான் நிலவு நீ மறைந்தாய்
வையம் இருள் சூழ்ந்ததுவே
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
உத்தமரே எங்கள் ஐயாவே!
என்றும் ஒளியாய் இருந்து வழிகாட்டிய
எங்கள் அன்புத்தந்தையே!

மனைவி, மக்கள்,
மருமக்கள், சகோதரி,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
போப்பிள்ளைகள், பெறாமக்கள்.

மாலுசந்தி,
அல்வாய் தெற்கு,
அல்வாய்.
(34940)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கி மேற்தரக் கிளை யாழ்ப்பாணம்

# ★ ஐம்பதாவது ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ் ★

02 - 02 - 1945 -- 02 - 02 - 1995

## ஆசிச் செய்திகள்

## MESSAGE FROM THE CHAIRMAN

I am impressed with the performance of Bank of Ceylon, Jaffna Branch during the last 50 years - providing unstinted services to the public of Jaffna peninsula.

Despite the constraints that beset the Branch it is heartening to note that the Chief Manager and the members of staff of Jaffna Super Grade Branch have arranged to celebrate the occasion in association with our long-standing and loyal customers.

There is no doubt that the Bank of Ceylon, Jaffna Branch has to play a vital and a constructive role in the progress and development of Jaffna District and this memorable day will be a reminiscence of the past and a promise for the future.

My congratulations to the staff, past and present, customers and well wishers.

**R. N. Asirwatham,**
Chairman.

## நல்லை ஆதீன முதல்வர்

பேரன்பு மிக்க பெருந்தகையீர்,

யாழ். இலங்கை வங்கியின் ஐம்பதாவது நிறைவு விழா நிகழவிருப்பதறிந்து பெரிதும் மகிழ்வுறுகிறோம். அரை நூற்றாண்டு நலம் நிறைந்த சேவை ஒரு சாதனை. இக்கால இன்னல்களையும், இடர்களையும் தாங்கி மனந் தளர்வுறாது ஒற்றுமையோடு ஒத்துழைத்த இவ் வங்கி அலுவலர்கள், அன்பர்களை உளமார வாழ்த்தி வருங்காலத்திலும் இவ் வங்கியின் நற்சேவை வளர்ந்தோங்க வேண்டுமென எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவருளை மனமுருகி வேண்டி எல்லோருக்கும் எமது மனப்பூர்வமான நல்லாசிகளை வழங்குகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்**
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

## உதவிப் பொது முகாமையாளர்

இலங்கை வங்கியின் யாழ்ப்பாணம் மேற்தரக் கிளையின் 50ஆவது பூர்த்தி விழாவை முன்னிட்டு இச் செய்தியை வழங்குவதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த அரை நூற்றாண்டு காலமாக எமது இக்கிளை தனது வாடிக்கையாளர்களின் பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்கும் குறிப்பாக தேசத்தின் வளர்ச்சிக்கும் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும். யாழ். குடாநாட்டில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட "உள்நாட்டு வங்கி" என்ற பெருமையும் இதற்குச் சாரும்.

1945ஆம் ஆண்டு மாசி மாதம் 2ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட வங்கி 80ஆம் ஆண்டுகளின் ஆரம்பம் வரை பல சவால்களை எதிர்கொண்டு தொடர்ச்சியாகத் தளராது வளர்ந்து ஓங்கியது. 80ஆம் ஆண்டுகளில் பல பிரச்சினைகளை எதிர் நோக்கியபோதும் இக்கிளை தனது வாடிக்கையாளர்களுக்கு அளிக்க வேண்டிய சேவைகளிலிருந்து தவறவில்லை. 1983 — 87ஆம் ஆண்டு காலப்பகுதியில் நான் இக்கிளையின் பிரதான முகாமையாளராகக் கடமையாற்றிய காலத்தில் ஊழியர்களது தன்னலமற்ற அளப்பரிய சிறப்பான சேவையினால் வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றியதை எண்ணிப் பெருமைப்படுகிறேன்.

ஆரம்பத்தில் மிகச் சிறிய வாடகைக் கட்டடத்தில் இயங்கிய இக்கிளை நாளடைவில் நகரின் மிக முக்கியமான பகுதியில் தனக்கென ஒரு சொந்த இடத்தைக் கொள்வனவு செய்து பெரிய கட்டடம் அமைத்து வாடிக்கையாளர்கள் தமது வங்கிக் கடமைகளைச் செவ்வனே செய்ய வழி வகுத்தமை அதனது வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் சான்று பகரும். எமது வாடிக்கையாளர்கள் தந்த தளராத ஆதரவு தான் இவ்வெற்றிக்கு முழுமுதற் காரணமாகும். இந்த ஆதரவு எதிர்வரும் காலத்திலும் எமக்கு முழுமையாக இருக்கும் என்பது அசையாத நம்பிக்கையாகும்.

இத் தருணத்தில் இக்கிளையின் வெற்றிக்கு அயராது உழைத்த கடந்த கால, நிகழ்கால ஊழியர்களை நான் மனமார வாழ்த்துகின்றேன். இப் "பொன் விழாவை" சிறப்பான முறையில் கொண்டாட ஏற்பாடு செய்த கிளையின் பிரதான முகாமையாளருக்கும் ஏனைய அனைத்து ஊழியர்களுக்கும் எனது நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன். மேலும் வங்கியின் வளர்ச்சிக்குக் காரணமான வாடிக்கையாளர்களுக்கும் எனது நன்றியும், வாழ்த்துக்களும் உரித்தாகுக. இறுதியாக எமது வங்கி இதுகாறும் ஆற்றி வந்த தனது சேவைகளைத் தொடர்ந்தும் தளராது வழங்கி, அதன் மூலம் வங்கியும், நாடும் நன்மைகளைப் பெறப் பிரார்த்திக்கின்றேன்.

**முத்துமணி கனகரத்தினம்**
உதவிப் பொது முகாமையாளர்
(வட மாகாணம்)

எமது கிளையின் ஐம்பதாவது வருட சேவையைக் குறிக்கும்முகமாக கலை நிகழ்ச்சி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டு வருகிறது. இக் கலை நிகழ்ச்சியை வெகுவிரைவில் நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் பூர்த்தியுறும் தறுவாயில் உள்ளதென்பதை எமது வாடிக்கையாளர்கள், முன்னாள் ஊழியர்கள் மற்றும் ஆதரவாளர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம். இதன் விவரம் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும். அனைவரையும் இந்நிகழ்ச்சியில் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம். இக்கலை நிகழ்ச்சி நடைபெறும்பொழுது பொன்விழா மலர் வெளியீடும், யாழ் அரசினர் மருத்துவமனைக்கு எமமால் வைத்திய உபகரணங்கள் அன்பளிப்பும், எமது கிளையில் நடைமுறைக் கணக்கு வைத்திருக்கும் முதல் இருபத்தைந்து வாடிக்கையாளர்களுக்கு அன்பளிப்பும் இக்கிளை ஊழியர்களினால் தமது வருமானத்திலிருந்து அளிக்கப்பட்ட பணத்தின் மூலம் நலன்புரி சேவைக்கென வழங்க இருக்கும் அன்பளிப்பு எமது கிளை ஆரம்பித்த 02—02—1945 முதல் 02—02—1946 வரை [ஒருவருடம்] சேவையாற்றி தற்பொழுது ஓய்வூதியம் பெறும் ஊழியர்களுக்குரிய அன்பளிப்பு முதலான நிகழ்ச்சிகளும் நடைபெறுமென அறியத் தருகிறோம்.

— விழாக்குழு.

## யாழ்ப்பாண மேற்தரக் கிளையின்

## வங்கியியல் துறை வரலாறு

இலங்கையில் வங்கியியல் துறை 1994ஆம் ஆண்டு ஆனி மாதம் 01ஆம் திகதியுடன் 153 வருடங்களை பூர்த்தி செய்து இன்று 154ஆவது வருடத்தில் காலடி வைத்துள்ளது.

### வங்கியியல் துறையின் உருவாக்கம்

பிரித்தானியருடைய ஆட்சியின் கீழ் நாம் பல ஆண்டுகள் இருந்த போதும் உலகில் அவர்கள் வர்த்தகத்தை மையமாகக் கொண்ட தேசம் என்று அழைக்கப்பட்ட போதும் அவர்களால் இலங்கையருக்கு எந்த வகையிலும் வங்கிச் சேவைகள் வழங்கப்படவில்லை. சென்ற நூற்றாண்டின் முதல் நான்கு கண்டது. பெருந்தோட்டத்திற்குத் தேவையான வசதிகளை மேற்குறிப்பிட்ட செட்டியார்களால் வழங்க முடியாது போனமையால் தேவையான முதலையும் அதனோடு இணைந்த சேவையையும் பெறுவதற்கு ஒரு வங்கியின் தேவை அவசியமாகஇருந்தது.

### இலங்கை வங்கியின் தோற்றம்

இலங்கையில் காணப்பட்ட இச் சூழ்நிலையை மையமாகக் கொண்டு பிரபல லண்டன் வர்த்தகர் வில்லியம் தொம்சன் என்பவர் ஒன்றேகால் லட்சம் ஸ்ரேலிங் பவுண் நாணயத்தை முதலாகக் கொண்டு 1841ஆம் ஆண்டு இந்த வங்கியின் பெயர் "ஓரியென்றல் வங்கி" என மாற்றப்பட்டது. 1851ஆம் ஆண்டு முதலாவது இலங்கை வங்கியின் செயற்பாடுகளையும் பொறுப்பேற்று இவ் வங்கி செயற்படத் தொடங்கியதும் மேற்படி இலங்கை வங்கி செயற்பாடுகள் முடிவுக்கு வந்தன.

### தற்போதைய இலங்கை வங்கியின் தோற்றம்

தற்போதைய இலங்கை வங்கியின் தோற்றம் 1932 இலேயே ஆரம்பமாகி விட்டது எனக் கொள்ளலாம். இலங்கையில் வணிக வங்கியியல் மற்றும் காப்புறுதி சம்பந்தமான ஒரு ஆணைக்குழுவினை நியமிக்குமாறு



இலங்கை வங்கியின் யாழ். மேற்தரக் கிளையின் கம்பீரத் தோற்றம்

சகாப்தங்களுக்குப் பின்பு தான் வங்கிச் சேவைகள் இலங்கையில் ஆரம்பமாகின. எனினும் இதற்கு முன்னைய காலப்பகுதியில் பெருமளவிற்கு வங்கித் தொழிலை ஒத்ததாக ஒரு வகை நிதி வர்த்தக நடவடிக்கையை "நாட்டுக் கோட்டை செட்டியார்கள்" என அழைக்கப்பட்டவர்களால் முற்று முழுதாக இலாப நோக்கத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. வணிகத் துறையில் பெரும்பாலானவர்களுக்கு இவர்கள் அதிகளவு நிதியைக் கடனாக வழங்கி வந்தமையால் நாட்டின் வர்த்தகத்துறையை அநேகமாகத் தமது கட்டுப் பாட்டுக்குள் வைத்திருந்தனர்.

இலங்கையில் மலை நாட்டுப் பிரதேசத்தைக் கைப்பற்றியதுடன் பிரித்தானியா அங்குள்ள நிலப் பரப்பில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையை ஆரம்பித்து தமது செயற்பாட்டில் வெற்றியும் ஆனி மாதம் 1ஆம் திகதி வங்கியொன்றை இலங்கையில் ஆரம்பித்தார். இலங்கையில் அக்காலகட்டத்தில் காணப்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் எழுச்சி காரணமாக அதன் இரண்டாவது கிளை 1843ஆம் ஆண்டு கண்டியில் நிறுவப்பட்டது.

பின்பு கோப்பியின் விலையில் ஏற்பட்ட சரிவின் காரணமாக பிரித்தானியாவில் ஏற்பட்ட பொருளாதார வர்த்தக நெருக்கடிகளால் வங்கி வளர்ச்சி பெரிதும்

**ஐ. தங்கேஸ்வரன்**
முகாமையாளர்,
இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம்.

தடைப்பட்டது. இக்காலப் பகுதியில் இந்தியாவில் இருந்த (பிரபல) பெரிய வங்கியான பாங் ஒவ் வெஸ்ரேன் இந்தியா (Bank of Western India) இலங்கையில் ஒரு கிளையை நிறுவியது. பின்பு 1932ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் திகதி அரச மன்றத்திற்கு திரு. ஜோர்ஜ். ஈ. டீ. சில்வாவினால் ஒரு பிரேரணை முன் வைக்கப்பட்டது. இந்தப் பிரேரணையை அடிப்படையாகக் கொண்டு 1934ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் வங்கி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவின் தலைவராக சேர் சேராப்பு பொக்கனவலவும் அவருடன் சேர். மாக்கஸ் பெர்னாண்டோ, டாக்டர் எஸ். சி போலும் அங்கத்தவராக இருந்தனர். இக்குழுவின் விதப்புரைகளில் இலங்கையிலுள்ள வர்த்தகர்களின் நீண்ட நாள் அபிலாசைகளை நிறைவேற்றுமுகமாக ஒரு தேசிய வங்கியை உருவாக்க வேண்டுமென்ற பரிந்துரை வழங்கப்பட்டு இருந்தது. இந்தப் பரிந்துரைகளுக்கிணங்க சட்டவாக்கம் 1939ஆம் ஆண்டு அரச மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு இன்றைய இலங்கை வங்கி

(4ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வங்கியின் நிலைப்பாடு
## 31 - 12 - 1993

மில்லியன் ரூபாய்களில்

| | | |
|---|---|---|
| (01) | வரிக்கு முந்திய இலாபம் | 1723 |
| (02) | மொத்த சொத்துக்கள் (தேறிய) | 83888 |
| (03) | மொத்த வருமானம் | 10361 |
| (04) | மொத்தக் கடன்களும், முற்பணங்களும் | 47004 |
| (05) | விவசாயக் கடன்கள் | 3097 |
| (06) | வீடமைப்புக் கடன்கள் | 2577 |
| (07) | தொழில் சார் கடன்கள் | 3423 |
| (08) | வர்த்தகக் கடன்கள் | 18003 |
| (09) | மொத்த வைப்புக்கள் | 55759 |
| (10) | இறக்குமதிக்கான நிதி வழங்கல் | 1688 |
| (11) | ஏற்றுமதிக்கான நிதி வழங்கல் | 2855 |
| (01) | வைப்பாளர்களின் எண்ணிக்கை | 3094244 |
| (02) | கிளைகளின் எண்ணிக்கை | 290 |
| (03) | ஊழியர்களின் எண்ணிக்கை | 10123 |
| (04) | கொடு கடன்களின் எண்ணிக்கை | 363043 |

வங்கிச் சந்தையில், இலங்கை வங்கியினதும் ஏனைய வங்கிகளினதும் பங்குகள்

| | | இலங்கை வங்கி | ஏனைய வங்கிகள் |
|---|---|---|---|
| (01) | சொத்துக்கள் | 32.49% | 67 51% |
| (02) | வைப்புக்கள் | 32 00% | 68 00% |
| (03) | கடன்கள் | 28.56% | 71 44% |
| (04) | வதியாதோர் / வதிவோர்) வெளிநாட்டு நாணய வைப்பு ) | 45 66% | 54.34% |

(விளம்பர இல. சி-478)

## ஆசிச் செய்திகள்

## MESSAGE FROM OUR GENERAL MANAGER

I have great pleasure in issuing this special message on the occasion of the 50th Anniversary of our Jaffna Super Grade Branch.

This branch which was established on 2 February 1945 as the 5th Branch of the Bank of Ceylon is Completing 50 years of dedicated service in 1995. It is indeed a matter of great satisfaction to the Management and our customers that the branch has been able to compete effectively with other established Commercial Banks and continue to provide banking facilities to all sectors of the community whilst maintaining its predominant position in the Banking Sector. This success is no doubt due entirely to the commitment, loyalty and dedication, of the staff who have served this branch over the years.

Today in particular the banking activities in the Jaffna peninsula are subject to a complex environment. The constraints are many, but our earnest endeauour is to ensure that new innovative banking products and services will continue to reach the people of Jaffna, enabling them to reap the benefits of modern technology and sophistication in banking services.

I take this opportunity to record my appreciation of the valued and dedicated services rendered by the past and present members of staff of the Jaffna Branch. I also wish to thank each and every customer of our Jaffna Branch. who has in no small way contributed to the success of our Branch.

I warmly congratulate the present Chief Manager, the staff and the customers of Jaffna. on this happy occasion and wish them every success in their future endeavours.

**Mrs. R. L. Nanayakkara,**
General Manager.

## GREETINGS FROM BISHOP OF JAFFNA

In the Modern World Banks play an important role as Economic Institutions serving the people's progress and development. Hence we recall with gratitude the great contribution the Jaffna Branch of the Bank of Ceylon has made to the progress of the people in the Jaffna peninsula. For the last 11 years we have been going through severe trials and hardships owing to the Ethnic conflicts in our regions. Even in this trying times, Bank of Ceylon has rendered faithful service to the public as well as Government Departments. Now all right thinking people and the Government are speaking or rebuilding the shattered economy of the North and the lives of the people, we expect the Bank of Ceylon to come forward in a big way to assist the people by way of loans, and other useful programmes to stimulate economic activity and thus Contribute towards the rebuilding of the people in the North.

On this happy occasion of the conclusion of the Golden Jubilee, we invoke blessings of God on all your endeavours.

**Rt. Rev. Thomas Saundranayagam,**
Bishop of Jaffna.

## பிரதான முகாமையாளர்

இலங்கை வங்கி யாழ்ப்பாண மேற்தரக்கிளை யாழ். மக்களுக்கு ஆற்றிவரும் அளப்பரிய சேவையின் 50 ஆண்டுகள் பூர்த்தி செய்வதைக் கொண்டாடும் இத்தருணத்தில் அதன் பிரதான முகாமையாளராகக் கடமையாற்றுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

எனது வங்கி வாழ்க்கை தளிர்நடை போடத் தொடங்கிய காலப்பகுதியிலிருந்து (தை 1975) முகாமையாளராக மானிப்பாயிலும், வவுனியாவிலும் கடமையாற்றிய 6½ வருடங்களைத் தவிர்ந்த ஏனைய காலப்பகுதியை இக்கிளையில் சேவையாற்றுவதையிட்டு பெருமையும், பூரிப்பும் அடைகின்றேன்.

யாழ். மாவட்டத்தில் 1979ஆம் ஆண்டு தொடங்கிய வங்கிக் கொள்ளைகளைத் தொடர்ந்து வங்கிகளின் செயற்பாடுகளில் மாற்றம் காணத் தொடங்கியது. பின் 1984ஆம் ஆண்டில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் பாரிய மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. ஆயினும் 1990ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஏற்பட்ட போர்ச்சூழலின் அழிவுகளினால் கடன் கொடுப்பனவு சம்பந்தமான கட்டுப்பாடுகளும் திரவப்பணம் சம்பந்தமான பிரச்சினைகளும் தோன்றி மக்கள் பல இன்னல்களைத் தாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இப்படியான இடர்களின் மத்தியிலும் இக்கிளையில் கிடைத்த அனுபவமானது: உயிரையே பணயம் வைக்க வேண்டிய வேளையிலும் தைரியத்துடனும் கடமையை செய்வதற்கும் 160இற்கு மேற்பட்ட ஊழியர்களுடன் பிரச்சினைகள் இன்றி கூட்டாக கடமையாற்றுவதற்கும், பல தரப்பட்ட வாடிக்கையாளர்களைக் கையாள்வதற்கும், பொறுப்புணர்வுடன் நேர்மையான சேவையை செய்வதற்கும் மிகுந்த உறுதுணையாக அமைகிறது

கடந்த 20 வருடங்களாக யாழ். மாவட்ட மக்களுக்கு இக்கிளை மூலம் சேவையாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தை ஒட்டியும் கல்வித் தாயாகிய வேம்படி மகளிர் கல்லூரிக்கு கடந்த மூன்று ஆண்டுகளாக பழைய மாணவ சங்கத்தின் தலைவியாக இருந்து சேவையாற்ற கிடைத்த சந்தர்ப்பத்தை ஒட்டியும் மகிழ்ச்சியடைகின்றேன்.

1983ஆம் ஆண்டிற்குப்பின் ஏற்பட்ட மாற்றங்களினால் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எமது வங்கியின் ஊழியர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## விசேட அன்பளிப்பு

இலங்கை வங்கியின் யாழ்ப்பாண மேற்தரக் கிளையின் 50வருட மகத்தான சேவைப் பூர்த்தி விழாவை ஒட்டி விசேட அன்பளிப்பு:

02-02-95 தொடக்கம் 02-05-95 வரை உள்ள காலப் பகுதியில் யாழ் மேற்தரக்கிளையில் பெறப்படும் ஒரு வருடத்திற்கான சேமிப்பு சான்றிதழ்களுக்கு ஒரு வீத மேலதிக வட்டி வழங்கப்படும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரதான முகாமையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



சங்கானை

நிகரை ஞான 'வைரவர் ஆலய

வருடாந்த

அலங்கார உற்சவம்

நிகழும் பவ வருஷம் தை மாதம் 19 ஆம் நாள் (2-2-95) வியாழக்கிழமை (இன்று) தொடக்கம் 15 நாட்களுக்கு உற்சவம் நடைபெறும்.

உற்சவ காலங்களில் தினமும் இரவு 8.30 மணி முதல் 9.30மணிவரை தெய்வீகப் பேருரைகள் நடைபெறும்.

திரு. ஆறு. திருமுருகன் B.A அவர்கள்
(அகில இலங்கைக் கம்பன் கழகம்)

பொருள்: "விநாயக புராணம்"
தொடர் சொற்பொழிவு
2-2-95 தொடக்கம் 7-2-95 வரை

சிவநெறித் தொண்டன்
செ. சத்தியமூர்த்தி அவர்கள்

பொருள்: "படைவீடு தந்த பரமன்"
(ஆறுபடைவீடு)
தொடர் சொற்பொழிவு
8.2.95 தொடக்கம் 15.2.95 வரை

ஆலய பரிபாலனசபை

ஞான வைரவப் பெருமான் அருள் அனைவர்க்கும் கிடைக்கப் பிரார்த்திக்கும்

ஞானம் ஆட்ஸ் அன் அட்வடைசிங்ஸ்.

நிறுவனத்தினர் — சங்கானை

(34992)



P' NEW SCIENCE CENTRE

எழிலகம் முன், யாழ்ப்பாணம்.

95 A/L DAY CLASSES

ஆரம்பம்: 03-02-1995 வெள்ளி

Chemistry Physics
Zoology Botany
Pure App.

★ வகுப்புக்கள் 9 a.m. — 1.30 p.m. வரை நடைபெறும்.

★ விசேட பட்டதாரி ஆசிரியர்களினால் 6 மாதங்களில் முழுப் பாடத்திட்டமும் முடிக்கப்படும்.

நிர்வாகி

[சி/482]



பனைச் சொந்தக்காரர்களின்

கவனத்திற்கு

[கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட]

கரவெட்டி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க எல்லைப் பரப்பிற்கு உட்பட்ட பனங் காணி உரிமையாளர்கள், தங்கள் பனை மரங்களை சங்கத்திற்கு குத்தகைக்குக் கொடுத்து நியாயமான பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். பனை மரங்களை குத்தகைக்கு கொடுக்க விரும்புபவர்கள் உடனடியாக கரவெட்டி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூ. சங்கம்.
கரவெட்டி.

[34989]



கண்ணீர் அஞ்சலி

வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தின் விரிவுரையாளராக சேவை செய்யும்.

டாக்டர் இராமசாமி கிருஸ்ணசாமி
அவர்களின் தந்தையார்

திரு. ஆறுமுகம் இராமசாமி

அவர்களின் மறைவினால் துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உறுப்பினர்கள் - வைத்திய மாணவர்கள்

வட இலங்கை ஹோமியோபதி சங்கம்,
நாவலர் வீதி (ஐந்து சந்தி),
யாழ்ப்பாணம்.

[34951]


# சாவகச்சேரி சந்தையில் சுறாமீன் வயிற்றில் 'பாம்பு'!

தென்மராட்சி, பெப். 2

ஏழு அடி நீளமான சுறா மீனை வெட்டியபோது அதன் வயிற்றுக்குள் இரண்டு அடி நீளமான பாம்பு முழுமையாக காணப்பட்டதால் மீன் சந்தையே அல்லோலகல்லோலப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரியில் இடம்பெற்றது.

சுறா மீனுக்குள் மலைப் பாப்பு இருந்ததாக சாவகச்சேரி நகரப் பகுதியில் வதந்தி பரவியதை அடுத்து காவல் துறையினர் அவ்விடத்துக்கு விரைந்து அந்த சுறா மீனை விற்பதற்கு தடைவிதித்தனர்

விசாரணையின் பின்னர் சுறா மீனின் வயிற்றினுள் இருந்தது சுருளி என்னும் கடல் பாம்பு எனத் தெரிய வந்தது அதை அடுத்து அந்த மீனை விற்பதற்கு அனுமதிக்கப்பட்டது:

மீனுக்குள் இருந்த பாம்பைக் பார்க்க மக்கள் சந்தையில் கூடியிருந்தனர்

(ஓ-117)

# நிபந்தனையற்ற இணைப்பு; முஸ்லிம் காங். எதிர்க்கும்

கொழும்பு, பெப். 2

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு ஆலோசனையில் வடக்கு - கிழக்கு நிபந்தனையற்ற முறையில் இணக்கப்பட்டால் முஸ்லிம் சமூகம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் துறைமுக, கப்பல் போக்குவரத்து புனர்வாழ்வு அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் "சண்டே லீடர்" பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு கூறினார்.

அதிகாரப் பகிர்வு ஒரு மாகாணத்துக்கு மேற்பட்டதாயின் அது எப்பொழுதும் நிபந்தனையுடன் கூடிய இணைப்பாகவே இருக்க வேண்டும் என்று நாம் கூறி வந்துள்ளோம்—

தொடர்புபட்டிராத முஸ்லிம் பிரதேசங்களுக்குத் தனியான மாகாணசபை வேண்டும். அல்லது வடக்கு-கிழக்கு கூட்டு மொத்தமாகத் தொடர்புபட்ட பிரதேசங்களில், தொண்டமான் - அஷ்ரப் ஆலோசனைகளில் சுட்டிக்காட்டப்பட்டவாறு சமூகங்கள் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய தான அரசியலமைப்பு வழிமுறைகள் வகுக்கப்படவேண்டும்— என்பதே எமது நிலைப்பாடு என்று அமைச்சர் அஷ்ரப் கூறினார்.

[ஓ-க]


சித்திவிநாயகர் துணை

அருள்மிகு ஆயாக்கடவை
சித்தி விநாயகர் தேவஸ்தானம்
புன்னாலைக்கட்டுவன்

ஏக தின லஷ்சார்ச்சனை
விஞ்ஞாபனம்

(ஒரே நாளில் லஷ்நாம வழிபாடும் லஷ் ஹோமமும்)

நிகழும் பவ வருஷம் தை மாதம் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை (03-02-1995) அதிகாலை 5-30 மணிக்கு எல்லாம் வல்ல விநாயகப் பெருமானுக்கு விஷேச அபிஷேக ஆராதனைகள் ஆரம்பமாகி ஒரே நாளில் எம்பெருமானுக்கு பஞ்ச வில்வங்களால் லஷ் அர்ச்சனையும் லஷ் ஹோமமும் தொடர்ந்து இடம் பெற்று மாலை 7-00 மணிக்கு எம்பெருமான் வீதி உலா காட்சியும் இடம்பெறும். அடியார்கள் அனைவரும் இவ்வழிபாட்டில் கலந்து எம் பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்று உய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

பிரதமகுரு சிவஸ்ரீ தி. செங்காதரக் குருக்கள்
(புன்னாலைக்கட்டுவன்)
வேதாகம கிரியா பூஷணம்
தவில் கச்சேரி N. R. S. ரவீந்திரன் குழுவினர்
(இணுவில்)

சி. சிவசுப்பிரமணியம்,
தை மாத சதுர்த்தி உற்சவ-
உபயகாரர்.

[7884]



காணவில்லை

யாழ். பிரதான வீதி, இல, 80 A யில் வசிக்கும்

இ. கயேந்திரன்

என்பவரை சென்ற 16-01-95 பின்னேரம் 5மணி தொடக்கம் காணவில்லை. தயவு கூர்ந்து அவரைப் பற்றி அறிந்தவர்கள் உடன் மேற்படி விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

நன்றி.

தகவல்:
பா. றாயு. [அண்ணன்]

(34987)



கண்ணீர் அஞ்சலி

திருமதி
தெய்வானைப்பிள்ளை செல்லையா

[ஓய்வுபெற்ற ஆரம்பப் பிரிவுத் தலைவி]

அன்போடடக்கம் அறிவுடையாய்
நன்போதனைகள் பல புரிந்தாய்
நன்றே செய்தாய் இராமநாதன்
கல்லூரி சிறந்திடவே,
இன்றே எம்மைப் பிரிந்து
விட்டாய்
நன்றோ இது தகுமோ நாம்
வாடுவது.

அதிபர், ஆசிரியர்கள்.
யா/ இராமநாதன் கல்லூரி

[சி-5773]



கண்ணீர் அஞ்சலி

36 ஆண்டுகளாக வீரகேசரிப் பத்திரிகையின் நல்லூர் நிருபராகவிருந்து அரும் பணியாற்றிய அமரர் ஆசிரியமணி ஆர் ரி. சுப்பிரமணியம் ஜே. பி அவர்களின் பிரிவால் மனத்துயர்வுற்று அன்னாரின் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர்
மல்லாகம்

(7886)


# யாழ்ப்பாண மேற்தரக்....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக்கப்பட்டது. 1841 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கை வங்கிக்கும், இன்றைய இலங்கை வங்கிக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை என்பதை நாம் தற்போது உணர்ந்து கொள்ளலாம்.

இலங்கை வங்கி இயக்குனர்களின் முதலாவது கூட்டம் 1939ஆம் ஆண்டு ஆடி மாதம் நடைபெற்று இலங்கை வங்கி சம்பிரதாய பூர்வமாக 1939ஆம் ஆண்டு ஆவணி மாதம் 2ஆந் திகதி அன்றைய தேசாதிபதியாக இருந்த சேர் அன்றூ கல்டிகொற் என்பவரால் 41 பிரிஸ்டல் வீதி, கோட்டை எனும் முகவரியில் அமைந்த கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டது. இந்த இடத்திலேயே இன்றும் வங்கியின் முதலாவது கிளையான 'நகர அலுவலகம்' (City Office) தொடர்ந்து இயங்குகின்றது, வர்த்தக நடவடிக்கைகள் துரித வளர்ச்சியடைந்ததினால் முதல் இலங்கை வங்கியைப்போன்று தற்போதைய இலங்கை வங்கியும் தனது நடவடிக்கையை மலை நாட்டுப்பகுதிக்கு விரிவுபடுத்து முகமாகத் தனது இரண்டாவது கிளையை 1941ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15ஆம் திகதி கண்டியில் நிறுவியது மேலும் தொடர்ச்சியாக இவ் வங்கியின் நடவடிக்கைகள் வளர்ச்சி அடைந்ததில் அது நிறுவப்பட்ட நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு 1942ஆம் ஆண்டு மார்கழி மாதம் 14ஆம் திகதி 3ஆவது கிளையை காலியிலும், 1943 ஆம் ஆண்டு ஆனி மாதம் 21ஆந் திகதி 4ஆவது கிளையை புறக்கோட்டையிலும், 1945ஆம் ஆண்டு மாசி மாதம் 2ஆம் திகதியில் தனது 5ஆவது கிளையை யாழ்ப்பாணத்திலும் நிறுவியது.

## யாழ்ப்பாணக் கிளை

யாழ்ப்பாணக் கிளை யாழ். நகரில் அமைந்துள்ள பரணி ஹோட்டல் அமைவிடத்தில் திறக்கப்பட்டது. அப்பொழுது உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 6ஆக இருந்தது. அக் கிளையில் முதலாவது முகாமையாளராக [அப்பொழுது முகவர் என அழைக்கப்பட்டார்] திரு. செல்லையா லோகநாதன் பொறுப்பேற்றார். இவர் பின்னர் 1953இல் பொது முகாமையாளரான முதலாவது இலங்கையர் என்ற பெருமையைப் பெற்று 16 வருடக் கடமையின் பின்னர் 1969 ஆடியில் இலங்கை வங்கியில் இருந்துஓய்வுபெற்றார்.

அப்போதிருந்த ஒரேயொரு போட்டியாளராகிய மேர்க்கன்டைல் வங்கி (Mercantile Bank)யிடமிருந்து கடுமையான போட்டியினை எதிர் நோக்கிய போதும் 1ஆவது முகாமையாளரால் கடைப் பிடிக்கப்பட்ட சிறந்த கொள்கையினால் யாழ்ப்பாணக் கிளை துரிதமாக வளர்ச்சியடைந்தது.

யாழ்ப்பாணக் கிளை உருவாகிய சிறு காலப்பகுதிக்குள்ளேயே அதன் வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாக இருந்தமையால் முகாமைத்துவம் இட வசதியுள்ள ஒருகட்டடத்தினுள் அதன் சேவைகளை நடத்தத் தீர்மானித்தது. அதற்கமைய 1960களில் தற்போதிருக்கும் சொந்தமான கட்டடத்தை கட்டத் தொடங்கி நவம்பர் 1961இல் இக்கட்டடத்தில் தனது சேவையை தொடர்ந்தது புதிய கட்டடத்தினுள் நகர்ந்த பின்னர் ஏற்பட்ட துரித வளர்ச்சியின் காரணமாக 1982இல் இக்கிளை மேற்தரக்கிளையாகத் (Super Grade Branch) தரமுயர்த்தப்பட்டது இன்று யாழ்ப்பாண மக்களுக்கு 50 வருட சேவையைப் பூர்த்தி செய்துள்ள அதேவேளை இலங்கை வங்கி என்ற ரீதியில் நாட்டிற்கு 56வருட சேவையை வழங்கியுள்ளதுடன் இலங்கையிலுள்ள போட்டி வங்கிகளின் சந்தைப் பங்கின் பெரும்பாகத்தினை தன்னகத்தே கொண்டிருப்பதுடன் வங்கித் தொழிலில் தொடர்ந்தும் முன்னணி வகிக்கின்றது.

மிகப் பெருமையுடன் இங்கு நாம் குறிப்பிட வேண்டிய விடயம் என்னவெனில் யாழ்ப்பாணக் கிளையின் வைப்பு சந்தைப்பங்கு நிலையானது. இலங்கை வங்கியின் வைப்பு அமைப்பில் மிக உயர்வாக இருப்பதுடன் இத் தொகை மொத்த வைப்புகளில் 6.11%தினை பதிவு செய்துள்ளது. கடந்த சில காலப் பகுதியில் நிலவிய யுத்த நிலை காரணமாக யாழ்ப்பாணக் கிளையின் [illegible] குறிப்பாக கடன் வழங்குதல் பகுதியில் வீழ்ச்சியைக் காட்டிய போதிலும் தற்போது ஏற்பட்டுள்ள அமைதிச் சூழலின் அடிப்படையில் அமைதி மீள நிலை நிறுத்தப்படும் பட்சத்தில் எமது கிளையின் செயற்பாடுகளும் மீள இயல்பு நிலைக்குக் கொண்டுவரப்பட்டு தற்போதைய தொழில் நுட்ப விருத்தியாகிய 'தன்னியக்க' முறை அறிமுகப்படுத்தப்பட்டு எமது கிளை நவீனமயப்படுத்தப்படுமென நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றோம்.

யாழ்ப்பாணக் கிளையின் வியாபார அதிகரிப்புடன் 18-02-59இல் யாழ். மாவட்டத்தில் பருத்தித்துறையில் 2ஆவது கிளை நிறுவப்பட்டது. அதைத் தொடர்ந்து சுன்னாகம், ஊர்காவற்றுறை, மானிப்பாய், யாழ்ப்பாணம் 2ஆவதுகிளை, சாவகச்சேரி, காங்கேசன்துறை, நெல்லியடி, ஆகிய இடங்களில் கிளைகள் நிறுவப்பட்டுள்ளன. யாழ். மாவட்ட மக்களில் அநேகமானோர் யாழ்ப்பாண மேற்தரக் கிளையில் கணக்கினை பேணுவதினை ஒரு பெருமையாகக் கருதுகிறார்கள்.

## இலங்கை வங்கியின் இன்றைய நிலை

இன்று இலங்கை வங்கியின் கிளைகள் 289 ஆக நாடு முழுவதும் பரந்துள்ளன. இங்கிலாந்திலும் மாலைதீவிலும் வெளிநாட்டு கிளைகளையும் அவைகளுடன் இணைந்ததாக 735 தொடர்பு வங்கிகளை உலகரீதியாகவும், பத்தாயிரத்துக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களையும் கொண்டுள்ளது. தேசத்தின் வங்கியாளராகிய இலங்கை வங்கியின் நோக்கம்.

1. உள்நாட்டிலும், உலகரீதியிலும் தேவையான நிதி சேவைகளையும், உற்பத்திகளையும் Financial Services & Products] வழங்கல்

2. தேசிய பொருளாதார வளர்ச்சிக்கும் துரித அபிவிருத்திக்கும் ஒரு ஊக்கியாக (Catalyst) இருத்தல்.

3. இலாபம், தொழிலாளர் தொகுதி மனப்பான்மை, மேம்பாடு என்பனவற்றை வளர்ப்பதற்காகப் பாடுபடல். [Striue for Growth with Profitability, Professionlism and Excellence]

வங்கியின் நோக்கத்தின் அடிப்படையில் அதன் தொழிற்பாடும், நடவடிக்கையும் உள்நாட்டு வங்கியியல், அபிவிருத்தி வங்கியியல், கூட்டு வங்கியியல், சர்வதேச வங்கியியல் என்பனவற்றின் கீழ் கண்காணிக்கப்படுகின்றன. வங்கியானது அதன் மீள அமைத்தல், நவீனமயப்படுத்தல் திட்டங்களின் கீழ் தனது போட்டியாளர்களுடன் போட்டியிடும் நோக்கில் தனது வாடிக்கையாளர்களுக்கான சேவைகளின் தரத்தை உயர்த்தியுள்ளது.

இலங்கை வங்கியானது சேமிப்பு, நிலையான வைப்புத் திட்டங்கள், கடன் வசதிகள், கட்டண அடிப்படையிலான சேவைகள் என்பவற்றை வழங்குவதன் மூலம் பரந்த அடிப்படையிலான வங்கியியல் சேவைகளை வழங்குவதனை நீடித்தபோது பல்வேறு புதிய நிதி சேவைகளையும் உற்பத்திகளையும் அதிகரித்தது.

இலங்கை வங்கியானது Swift இல் (Society for world wide International Financial Telecommunication) சர்வதேச அமைப்பில் அங்கத்துவம் வகிக்கின்றது. இவ்வங்கியினால் வியாபார நிதி, Forex செயற்பாடு, Nostro கணக்குகள், வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவுகள் ஆகிய சேவைகள் வழங்கப்படுகின்றன, Swift ஆனது இலங்கையில் 15 வங்கிகளுடனும், 105 நாடுகளில் உள்ள 4200 வங்கிகளுடனும் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வங்கியானது தொழில் மேம்படுத்தலுக்கும், ஆலோசனை சேவைக்கும் என பிரிவொன்றினை நிறுவியுள்ளதுடன் கடல் கடந்த [Off Shone] வாடிக்கையாளர்களுக்கான நிதி சேவைகளையும் அந்நிய செலாவணி வியாபார செயற்பாட்டினையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

இலங்கை வங்கியில் தொழிலின் விளைவாக இலங்கை வங்கியானது வைப்புக்கள், முற்பணங்கள், Nrfc /Rnnfc வைப்பு என்ற பெயரிலான முதலீட்டுப் பட்டியல்களில் அதிகசந்தைப்பங்கினை வைத்திருப்பதுடன் முன்னணி வகித்துச் செல்கின்றது.

இலங்கை வங்கியின் 55 வருட வரலாற்றில் வங்கியானது 1994 காலப்பகுதியில் அதிக இலாபத்தினை உழைத்து கணிசமான ஒரு வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன் 100 பில்லியன் (Billion) ரூபாவைக் கொண்ட அமைப்பாக மாறியுள்ளது. வாடிக்கையாளரின் வைப்பானது 18% ஆல் அதிகரித்து 65,794 மில்லியன் என்ற மட்டத்தினை அடைந்துள்ளது. அத்துடன் வங்கியின் மொத்த சொத்தானது 19% ஆல் அதிகரித்து 100 பில்லியன் (Billion) என்ற மட்டத்தை அடைந்துள்ளது.

இலங்கை வங்கியின் அதி சிறந்த நிதிச்செயல்பாடும் அதன் முன்னணி நிலையுமே அது தனது போட்டி வங்கிகளிடையே முதன்மை வகிக்கக் காரணமான உந்து சக்திகளாகும். இது தவிர கணனிமயப்படுத்தப்பட்ட நவீன தொழில் நுட்பங்களை அதிகளவிலும், கூடுதலான கிளைகளிலும் பிரயோகிக்கும் வங்கியும் இதுவேயாகும்.

★

# பிரதான...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு தங்களுடைய அறிவை விருத்தி செய்வதற்கோ, பயிற்சி முகாம்களில் கலந்து கொள்வதற்கோ வெளிநாட்டு பயிற்சிகளுக்கு செல்வதற்கோ சந்தர்ப்பங்கள் அரிதாகவே இருந்தன. இந்நிலையானது அவர்களின் அறிவையும் செயல் திறனையும் மேலும் விருத்தி செய்ய தடையாக அமைந்து விட்டது எனலாம்.

1990ஆம் ஆண்டு தொங்கிய பிரச்சினைகளினால் ஏற்பட்டதாக்கத்தின் பக்க விளைவுகளாக தொடர்பு சாதனங்கள் மின்சாரம், தபால் சேவை, போக்கு வரத்து சேவை போன்ற பல சேவைகளில் ஏற்பட்ட தடங்கல்களினால் யாழ். மாவட்டம் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்தும் வெளி உலகுடன் இருந்தும் துண்டிக்கப்பட்ட நிலைக்கு தள்ளப்பட்டது. உணவு, மருந்து, பணம் போன்ற பல பொருள்களில் ஏற்பட்ட தட்டுப்பாட்டினால் 100 ஆண்டுகளிற்கு பின்பும் இருந்திராத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக உணர்கின்றோம்.

எமது கிளையில் கடமையாற்றிய அநேகர் வெளிநாடுகளுக்கும், பிற மாவட்டங்களுக்கும் சென்றுள்ளனர். இதனால் தற்பொழுது 50% ஊழியர்களுடனேயே நாம் கடமை ஆற்றுகின்றோம். இப்படிப்பட்ட இடர்களுக்கு மத்தியிலும் வங்கிச் சேவையை நிதானத்துடன் யாழ். மக்களுக்கு வழங்கி வருகிறோம்.

1990ஆம் ஆண்டுக்குப் பின் நடைபெற்று வரும் வங்கிச் சேவைகளைப்பற்றிக் கூறுவதற்கு எமது வாடிக்கையாளர்களுக்கு நிறைய விடயங்கள் இருக்கும். மிகப் பெரிய அழிவுகளோடு ஏற்பட்ட மாறுபட்ட இச் சூழ்நிலைகளினால் நாம் முழுமையான சேவைகளை வழங்க முடியவில்லை. அத்துடன் திருப்பிச் செலுத்தப்படாத பெருந்தொகையான கடன்களும் அறவிடமுடியாமல் இருப்பதற்கும் இந்நிலை காரணமாக அமைந்து விட்டது.

இக் கிளை மேற்தரக்கிளை II என்ற தகுதியிலிருந்து மேற்தரக்கிளை I என்ற தகுதிக்கு தரம் உயரவும் கணணி செயற்பாட்டை அறிமுகப்படுத்தவும் 1983ஆம் ஆண்டிலேயே அனுமதிக்கப்பட்ட கட்டடத்தை விஸ்தரிப்பதற்கான செயற்பாட்டை நடைமுறைப்படுத்தவும் எமது 1995 பொன்விழா ஆண்டு அமைய வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

இறுதியாக இக்கட்டான இச் சூழலில் இக் கிளையை திறம்பட நடத்துவதற்கு துணிசரமான ஒத்துழைப்பை வழங்கிய எங்களது முகாமைத்துவத்திற்கும் இக்கிளை பகுதி முகாமையாளர்கள், ஊழியர்கள், அனைவருக்கும், வாடிக்கையாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் 1995ஆம் ஆண்டானது சமாதானத்தையும், வளர்ச்சியையும் கொண்டுவருவதன் மூலம் இந் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேன்மையடைய வேண்டுமென மனப்பூர்வமாக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

—திருமதி க. துரைராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
**292/2 காவலர் வீதி**
**யாழ்ப்பாணம்**

## பொன் விழாவில்

இலங்கை வங்கியின் யாழ்ப்பாணக்கிளை ஆரம்பிக்கப்பட்ட ஐம்பதாவது ஆண்டு நிறைவு நாள் இன்றாகும். யாழ்ப்பாணத்தின் நிதிச் சேவைகளை முன்னேற்றுவதில் இவ்வங்கி பெரும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

வங்கி நடவடிக்கைகள் மேல் மட்டத்தினர் அல்லது செல்வந்தர்களோடு சம்பந்தப்பட்டவை என்ற நிலை மாறி, அடிமட்ட மக்களுக்கும் சேவை புரியும் அளவுக்குப் பெரிய மாற்றங்களை இந்த வங்கி ஐம்பது வருடங்களில் நிலைநாட்டிய சிறப்பும் இந்த வங்கிக்கு உண்டு.

1983ஆம் ஆண்டுக்கு முன்னர், இலங்கை வங்கியின் சேவை நாட்டின் ஏனைய பகுதிகளைப் போலவே யாழ்ப்பாணத்திலும் ஒப்பீட்டளவில் வளர்ச்சி கண்டு வந்தது.

ஆனால் —

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக, இலங்கை வங்கியின் சேவை, ஏனைய பகுதிகளுக்குச் சமமாக இப்பகுதியில் இருந்தது என்று கூறமுடியாது. வங்கியின் நிதிச் சேவைகள் முற்றாக இப்பகுதி மக்களுக்கு உரிய முறையில் கிடைக்கவில்லை என்பது கசப்பான உண்மை.

அபிவிருத்தியோடு சம்பந்தப்பட்ட ஏனைய துறைகளைப் போலவே வங்கித் துறையிலும் பல புறக்கணிப்புகளும், மாற்றாந்தாய் நடவடிக்கைகளும் பரவி இருந்தன. அதனால் யாழ்ப்பாண மக்களுக்கு இலங்கை வங்கியின் சேவை மிகவும் மட்டுப்படுத்தப்பட்டும் நலிவடைந்தும் இருந்தது எனலாம்.

அதாவது யாழ்ப்பாணத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு சிறப்பாக — பெரிதாக — உதவியது என்று குறிப்பிட்டுக் கூறுவதற்கு இல்லை.

இதற்கான அடிப்படைக் காரணம், வங்கிச் சேவையில் அரசியல் அதிகாரத் தலையீடு இருந்தமையே என்பதனைப் புரிந்து கொள்ளலாம். அதாவது வடபகுதியின் பொருளாதார, நிதித்துறை வளர்ச்சியில் அரசியல் அதிகாரக் காரணங்களினால் போதிய அக்கறை செலுத்தப்படவில்லை.

இங்குள்ள மக்களின் பணத்தை திரட்டுவதில் இருந்தளவு அக்கறை அவர்களின் நலன்களையும், முன்னேற்றத்தையும் கவனிப்பதில் இருக்கவில்லை.

தேசிய பொருளாதார வளர்ச்சியிலும், அபிவிருத்தியிலும் வங்கிகள் ஊக்கிகளாக இருந்து பங்கு கொள்வதைச் சர்வதேச மட்டத்தில்பார்க்க முடிகிறது. அந்த வகையில் இலங்கை வங்கி தெற்கில் பணிபுரிந்த அளவுக்கு வடக்கில் செயலாற்றவில்லை.

இந்த நிலை மாற வேண்டும். இப்பகுதி மக்களின் நிதிவளங்கள் இதே பகுதி மக்களின் பொருளாதார, உற்பத்தி மற்றும் வர்த்தக, கைத்தொழில் துறைகளின் வளர்ச்சிக்கும், நலன்களுக்கும் பயன்படுத்தப்பட வேண்டும்.

வடக்கு எல்லாத்துறைகளிலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பகுதியாக விளங்குகிறது. எனவே இனிமேலாவது, இப்பகுதியின் அபிவிருத்தியில் அக்கறை கொண்டு உழைக்கும் விதத்தில் வங்கியின் தலைமைப் பீடம் தன்னை செயல் ரீதியாக மாற்றிக் கொள்வது அவசியம்.

போர் முடிந்து அமைதி திரும்பும்போது, வடக்கை மீளக்கட்டி எழுப்புவதற்கான புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகள் இங்கே நிறைய நடக்கவேண்டிய தேவை உண்டு. அப்போது இலங்கை வங்கி தன்னை இப்பணிகளில் முழுமையாக ஈடுபடுத்தி உதவவேண்டும்.

இதுவரை இருந்த தொய்வு நிலையைப் போக்கி, புறக்கணிப்பு நோக்கை நீக்கி, வடக்கின் வளர்ச்சிக்கு உழைக்கத் திடசங்கற்பம் கொள்ளவேண்டும்.

வடபகுதி மக்களின் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உந்துசக்தியாக விளங்கும் விதத்தில் மக்கள் நலன் நாடிய திட்டங்களுக்கும், மக்களின் புனர்வாழ்வுக்கும் பெரிய அளவில் உதவ, பொன்விழாக்காணும் தனது யாழ்ப்பாணக் கிளைக்கு இலங்கை வங்கி புத்துயிர் கொடுக்கவேண்டும். அவ்வாறு செய்யும் பட்சத்திலேயே மக்கள் ஆதரவோடு அது தன்னைவளர்த்து புதிய வங்கியியல்யுகத்துக்குதன்னை ஈடுகொடுக்க முடியும்.

# அரசமைப்பு சீர்திருத்தத்துக்கு புலிகளிடமிருந்தும் யோசனை

## அமைச்சர் பீரிஸ் கோருகிறார்

கொழும்பு, பெப் 2

''அரசமைப்பு சீர்திருத்தத்தில் உள்ளடங்க வேண்டியுள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் முன்வைக்கும் யோசனைகளையும் நாம் பரிசீலனை செய்யத் தயாராகவுள்ளோம்.''

இவ்வாறு அரசமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவரும், நீதி, அரசமைப்பு விவகார அமைச்சரும், பிரதி அமைச்சருமான ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனைகளை இம்மாதம் இறுதிக்குள் தயாரித்து முடிக்கும்படி ஜனாதிபதி பணித்துள்ளார்.

எதிர்வரும் ஜூலையில் மேற்கொள்ளப்படவுள்ள அரசமைப்பு சீர்திருத்தங்களில் இனப்பிரச்சினையை தீர்வுக்கு கொண்டு வருவதற்கான அரசியல் யோசனைகள் தொடர்பான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதில் அரச உயர்மட்டம் அக்கறை கொண்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ்க் கட்சி பிரதிநிதிகளுடனும் ஏனைய அரசமைப்பு நிபுணர்களுடனும் பேராசிரியர் பீரிஸ் உத்தியோகபூர்வமற்ற பேச்சுக்களை நடத்தி வருகிறார்.

இதுவரை வடக்கு-கிழக்கு இணைப்பு மற்றும் அது போன்ற முக்கிய விடயங்கள் தவிர்ந்த ஏனைய விடயங்கள் தொடர்பான யோசனைகளில் 50 சத வீதமானவை தயாரிக்கப்பட்டுவிட்டதாகவும்—

சர்ச்சைக்குரிய விவகாரங்கள் குறித்து சகல தரப்பினரும் இணங்கக்கூடிய யோசனைகளை தயாரிப்பது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் தெரியவருகிறது.

இது இவ்வாறு இருக்க இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அரசு எடுக்கும் முயற்சிகளை, ஐ. தே. க. அரசு குழப்பக்கூடாது என்று அக்கட்சியிலுள்ள சிறுபான்மை இனங்களின் முக்கியஸ்தர்கள் தலைமைப்பீடத்தை வலியுறுத்தி வருவதாக தகவல்கள் வந்துள்ளன. (இ-5)

## றோட்டறி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ். றோட்டறிக் கழகம் ஒழுங்கு செய்துள்ள விசேட கருத்தரங்கு இன்று வியாழன் மாலை 4-30 மணியளவில் யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறும்.

இக் கருத்தரங்கில் யாழ். பல்கலைக் கழக பொருளியல் துறை முதுநிலை விரிவுரையாளர் திரு. வி. பி. சிவானந்தன் ''யாழ்குடாநாட்டுத் தொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள்'' என்னும் தலைப்பில் விசேட கருத்துரை வழங்குவார். (இ-5)

## கூட்டணி-முஸ்லிம் காங். இவ்வாரம் சந்தித்துப் பேச்சு

தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இவ்வாரம் சந்தித்து அரசியல் தீர்வு ஆலோசனைகள் குறித்து விவாதிக்க உள்ளன.

இச்சந்திப்பின் போது கலாநிதி நீலன் திருச்செல்வம் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் —

ஜனாப் றாவ் ஹக்கீம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் — பிரதிநிதித்துவம் செய்வர்.

தமது சிந்தனைகளை ஒன்றாக்கி தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் கருத்து உடன்பாடு ஒன்றை ஏற்படுத்தும்படி நீதி, அரசமைப்பு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கலாநிதி நீலன் திருச்செல்வத்தையும் ஹக்கீமையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவர்கள் இருவரும் அரசியல் தீர்வு ஆலோசனைகளைப் பற்றி விவாதித்துவிட்டு அது பற்றித் தத்தமது கட்சிகளுடன் கலந்தாலோசிப்பார்கள்.

இந்தக் கருத்துக்கள் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடைபெற இருக்கும் அரசியல் பேச்சுவார்த்தையில் சேர்க்கப்படும் என அறியப்படுகிறது.

அரசியல் தீர்வு ஆலோசனைகளில் பிரதானமானது வடக்கு கிழக்குத் தமிழர்களுக்கு சுயாட்சி வழங்குவது பற்றியது என்று அரசாங்க அதிகாரிகள் கூறுகின்றனர் என்று 'சண்டே லீடர்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. [க]

### ஜெயவர்த்தனபுர

## பல்கலைக்கழகத்தில் 3 மணி நேர தேடுதல்

கொழும்பு, பெப். 2

தற்பொழுது மூடப்பட்டுள்ள ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் கடந்த 27ஆம் திகதி பொலீஸார் தேடுதலை நடத்தினார்கள்.

பல்கலைக்கழக வளவில் பெருந்தொகையான வெடிமருந்துகளும், குண்டுகளும் உள்ளன என்ற தகவலை அடுத்தே பொலீஸார் தேடுதலில் ஈடுபட்டனர்.

சுமார் 200 பொலீஸார் பங்குபற்றிய இந்தத் தேடுதல் 3 மணி நேரத்துக்கு மேல் நீடித்தது.

ஆயினும் பொலீஸார் வெடிமருந்து குண்டு எதனையும் கண்டுபிடிக்கவில்லை. சில இரும்புக்கம்பிகளும் கம்புகளும் தான் அங்கிருந்தன.

இதேவேளை—

மூடப்பட்டிருக்கும் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தைத் திறக்கக்கோரி வெகுஜனப் போராட்டம் ஒன்றை விரைவில் ஆரம்பிக்கப்போவதாக ஜெயவர்த்தனபுர மாணவர் சங்கமும் களனி பல்கலைக்கழக பிக்குமார் சங்கமும் அறிவித்துள்ளன. (ஒ-3-4)

## புலிகளின் குரல் வானொலியில்

02 — 02 — 1995

**வியாழன் இரவு**

- ★ 8-01 -- சொல்லுங்கள் பார்க்கலாம்
- ★ 8-10 — சித்தமருத்துவ குறிப்புகள்
- ★ 8-20 — உழைப்போம்— உயர்வோம் — நிகழ்ச்சியில் ''மனம்மாறிப் போச்சு'' குறுநாடகம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தாயகப் பாடல்கள்
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்

03 — 02 — 1995

**வெள்ளி காலை**

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — மணியாரம்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப் பாடல்கள்
- ★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

### தமிழீழ வானொலி

**ஒலிபரப்பு**

**வியாழன் மாலை**

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30 — இசையும் கதையும் — ''உணர்வு''
- ★ 5-50 — தமிழீழ கானங்கள்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — பொன் விளையும் பூமி — ''குறைவில்லை'' நாடகம் தயாரிப்பு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 – கேள்வி பதில்— விளையாட்டுத் தொடர்பானது
- ★ 6-25 — என் தெரிவு
- ★ 6-30 -- மணிக்கு மாலை ஒலிபரப்பு யாவும் நிறைவுபெறும்

## ஐ. ஐ. தே. மு. மேலும் பிளவுண்டது

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி மேலும் பிளவுபட்டுள்ளதாக ''திவயின'' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகித்த லலித் ஆதரவுக் குழு, காமினி ஆதரவுக் குழு ஆகியவற்றில் உள்ளவர்களில் சிலர் சேர்ந்து தனி அமைப்பு ஒன்றை ஆரம்பித்துள்ளதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-3]

## செங்குந்த இந்துவின் வைரவிழா

யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியின் வைரவிழா இம்மாதம் 3ஆம், 4ஆம், 5ஆம் திகதிகளில் கல்லூரியில் கொண்டாடப்படவுள்ளது.

விழாவுக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் மேற்கொண்டுள்ளது.

வைரவிழாவை ஒட்டி கல்லூரியில் பணியாற்றிய அதிபர்களின் உருவப்படங்கள் திரைநீக்கம் செய்யப்படவுள்ளன. மூன்று நாட்கள் நடைபெறும் விழாவில் கலை நிகழ்ச்சிகள் பலவும் இடம் பெறவுள்ளன.

மூன்றாம் நாள் விழாவின் போது வைரவிழா மலர் வெளியிடப்படும். (ஐ)

# சிங்களம் மட்டும் சட்டத்தால் வேலை இழந்தோருக்கு பதவி உயர்வு இல்லை

கொழும்பு, பெப் 2

சிங்கள மொழிப்பாதிப்பால் வேலை இழந்து மீண்டும் வேலைக்குச் சேர்க்கப்பட்ட தமிழ் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வோ அல்லது பதவி உயர்வோ வழங்கப்படவில்லை என்று முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக இருந்தபோது சிங்கள மொழியில் தேர்ச்சி அடையாத காரணத்தால் பல தமிழ் அரச ஊழியர்கள் வேலையிழந்திருந்தனர்.

மீண்டும் அவர்களுக்கு வேலை வழங்கப்பட்ட போதும் இதுவரை சம்பள மற்றும் பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ். இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் பண்டிதர் க. சச்சிதானந்தன் ''இயங்கு தமிழ்'' என்ற பொருளில் எதிர்வரும் ஞாயிறு காலை 9-00 மணிக்கு யாழ். எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் உரையாற்றுவார். (க-17)

## அதிபர்கள் கூட்டம்

சண்டிலிப்பாய், பெப். 2

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று வியாழன் பிற்பகல் 2 மணிக்கு மருதனார் மடத்தில் இயங்கும் யூனியன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. [க-14]

# யுத்தத்துக்கு முகம் கொடுத்து சளைக்காது மக்களுக்குச் சேவையாற்றும் வடபகுதி லயன்ஸ்

## கருத்தரங்கில் மாவட்ட ஆளுநர்

யாழ்ப்பாணம், பெப். 2

''யுத்தங்களுக்கு முகம் கொடுத்து போக்குவரத்து, நிதி நெருக்கடிகளுக்கு மத்தியிலும் சளைக்காது மக்களுக்குச் சேவையாற்றி வரும் வடபகுதி லயன்ஸ் கழகங்கள் போற்றுதற்குரியன. இவற்றின் மகத்தான சேவை கண்டு எனது உள்ளம் பூரிப்படைகிறது''

அண்மையில் யாழ். வந்திருந்த லயன் 306 — பி மாவட்ட ஆளுநர் லயன் எஸ். சிவபாதசுந்தரம் லயன்ஸ் கழகப் பிராந்தியக் கருத்தரங்கில் மேற்கண்டவாறு கூறினார்.

லயன் எஸ். ராஜேஸ்வரன் தலைமையில் யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் இந்த வைபவம் நடைபெற்றது.

லயன் எஸ். சிவபாதசுந்தரம் மேலும் பேசியதாவது:-

75 ஆண்டுகளுக்கு முன்னர் மெல்வின் ஜோன்ஸ் என்னும் அமெரிக்கரால் ஒரு சிறிய குழுவுடன் ஆரம்பிக்கப்பட்ட லயன்ஸ் கழகம் இன்று 181 நாடுகளில் 41 ஆயிரம் கழகங்களாக வளர்ந்து 15 லட்சம் உறுப்பினர்களைக் கொண்டு உலகிலேயே ஆகப் பெரிய சமூக சேவைக்கழகமாகப் பணிபுரிகிறது.

''நான், நீ என்னும் குறுகிய மனப்பான்மைகளைக் களைந்து ஒற்றுமையாக சேவை செய்ய வேண்டும். அதற்காகவே 'சேவையில் ஒற்றுமை' என்பதை (Unity in Service) எனது கொள்கையாகப் பிரகடனப் படுத்தியுள்ளேன்.

மனிதநேயமே சேவையைச் செய்ய முன்வருபவனுக்கான தூண்டுகோல்.

இன, மத, மொழி பேதம் கடந்த சேவையையே உலகம் நாடி நிற்கிறது. ஒற்றுமைதான் தன்னலமற்ற சேவையை வழங்கி நிற்கும்

இப்படி அவர் தெரிவித்தார்.

செய்யப்படுகின்ற சேவை விசுவாசமானதாகவும், சுயநலமற்றதாகவும் இருக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் தமது உரையில் வலியுறுத்தினார்.

லயன். எஸ். இராஜேஸ்வரன் தனது தலைமையுரையில் வடபிராந்திய லயன்ஸ் கழகங்கள் ஆற்றியுள்ள சேவைகளை [illegible]துடன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியிருப்போருக்கு உதவ மக்களிடம் சேகரிக்கப்படும் பணம் போதாமல் உள்ளது என்றார்.

இத்தகையோருக்கு உதவுவதற்கு தெற்கிலுள்ள லயன்ஸ் கழகங்கள் ஊடாக நிதி உதவி செய்யும் படியும் மாவட்ட ஆளுநரை அவர் கேட்டுக் கொண்டார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி) தமது உரையில் ''பொதுத் தொண்டுக்காக தம்மை அர்ப்பணித்து, சமுதாயத்துக்கு உதவியாளர்களாகவும், வழிகாட்டிகளாகவும் விளங்கிய ஒவ்வொருவரினதும் வாழ்க்கை பற்றிய குறிப்புகள் நூல் உருவம் பெற வேண்டும். அத்தகைய நூல்களே வருங்காலச் சந்ததிக்கு, நிகழ்காலச் சந்ததி கொடுக்கக் கூடிய சிறந்த வழிகாட்டி நூலாக அமையும் என்றார்.

''பிரார்த்தனை செய்யும் கைகளிலும் பார்க்க சேவை செய்யும் கைகள் புனிதமானவை''

சமயம், இலக்கியம், மொழி அரசியல் என்ற துறைகளினால் காண முடியாத ஒற்றுமையை தொண்டின் மூலமே அடையலாம்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் எனும் தத்துவத்திற்கேற்ப நமது சேவை பரந்துபட்டதாக இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இவ் விழாவில் லியோ கழகத்தினருக்காக 'லயன்ஸ் கொள்கை விளக்கப் பயிற்சிப் பட்டறை'' ஒன்று லயன் ராமகிருஷ்ணனால் ஒழுங்கு செய்து நடத்தப்பட்டது.

முன்னதாக லயன்ஸ் கழகத்தினர் புடைசூழ அழைத்து வரப்பட்ட மாவட்ட ஆளுநர் மங்கள விளக்கை ஏற்றி விழாவை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

'வாழ்வகம்', வதிரி பரமானந்தா ஆச்சிரமம் ஆகியவற்றுக்கு ஒவ்வொரு நீரிறைக்கும் இயந்திரமும் தெரிவு செய்யப்பட்டோருக்கு சக்கர நாற்காலி, பணமுடி என்பன விழாவில் வைத்து அன்பளிப்புச் செய்யப்பட்டன. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கெமரூஜ் இயக்கத்துடன் கம்போடியாவில் மோதல்

கம்போடியாவில் கெமரூஜ் இயக்கத்தினருக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம் பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் இடம் பெற்ற மோதலில் மட்டும் 6 பேர் கொல்லப்பட்டனர்.

மேலும் 24 வீடுகளும் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன.

கம்போடியாவில் நடைபெற்ற தேர்தலில் கெமரூஜ் இயக்கம் கலந்து கொள்ள மறுத்ததும்—

பின்னர் கம்போடிய அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்ததும் தெரிந்ததையே.

எனினும் ஐ. நா. தலைமையிலான சமாதான ஒப்பந்தத்தில் கெமரூஜ் கையெழுத்திட்டிருந்தது. (இ-5)

### அல்ஜீரியப் பிரச்சினை:

## பேச்சு நடத்துமாறு பிரான்ஸ் கோருகிறது

அல்ஜியேர்ஸ், பெப். 2

ஆயுதம் தாங்கிப் போராடி வரும் முஸ்லிம் தீவிரவாதிகளுடன் பேச்சு நடத்தி பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என அல்ஜீரிய அரசை பிரான்ஸ் கேட்டுள்ளது.

அல்ஜீரியாவில் கடந்த வாரம் நடந்த கார் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பலர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பிரான்ஸ் இக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இதற்கு முன்பும் பிரான்ஸ் இத்தகைய கோரிக்கையை விடுத்திருந்தது.

அல்ஜீரிய இராணுவ ஆதரவு அரசுக்கு எதிராக கடந்த 3 வருடங்களாக இடம்பெற்று வரும் ஆயுதப் போராட்டத்தில் இதுவரை 30 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். (இ-5)

## வத்திக்கானில் வேலை நிறுத்தம்

வத்திக்கான், பெப். 2

பரிசுத்த பாப்பரசரின் வாசஸ்தலமான வத்திக்கானில் பணியாற்றும் 150 தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரி போராட்டம் ஒன்றை நடத்தினர்.

இதனால் வத்திக்கான் அலுவலக வேலைகள் பாதிக்கப்பட்டதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (இ-3)

## தொலைத் தொடர்புகள் கிழக்கில் சீரமைப்பு

கொழும்பு, பெப். 2

கிழக்குமாகாண தொலைத் தொடர்பை சீரமைக்க தொலைத்தொடர்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது

சீரமைப்பு வேலைகள் எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்படவிருப்பதாகவும்—

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு மட்டும் 7 ஆயிரத்து 200 தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படும் என்றும்— தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## தமிழ்இசைவிழாவில்இன்று

யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற இசைவிழாவின் இரண்டாம் நாளான இன்று வியாழக்கிழமை மாலை 5-30 மணிக்கு மன்ற மாணவர்களின் மிருதங்க நிகழ்வும் 5-45 மணிக்கு செல்வன் சி. சாரங்கனின் வீணை இசையும், 6-15 மணிக்கு செல்வி சுவர்ணலதா கைலாசநாதனின் பாட்டும் நடைபெறும். தொடர்ந்து 7-15 முதல் 8-30 வரை திரு. சி. நாகராசாவின் பாட்டு நடைபெறும். [க-14-111]

## வரவு - செலவுத்திட்டத்தில் விசேடமாக எதுவும் இராது

கொழும்பு, பெப் 2

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு-செலவுத்திட்டத்தில் ஆச்சரியப்படத்தக்க எந்த விடயமும் இருக்காது.

இப்படி அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''த ஐலண்ட்'' செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் முதலாவது வரவு - செலவுத்திட்டம் இம்மாதம் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருப்பது தெரிந்ததே (இ-க)

### ஈழ அகதிகள் சென்ற

## படகுகளை திருப்பி அனுப்ப இந்தியா மறுத்து வருகிறது

யாழ்ப்பாணம், பெப். 2

வடக்கு-கிழக்குப் பகுதி மக்களிடமிருந்து கைப்பற்றிய 160 மீன்பிடிப் படகுகளை திருப்பித் தர இந்திய அரசு மறுத்து வருகிறது.

1990 - ஜூன் மாதத்தின் பின் ஆரம்பமாகிய இராணுவ நடவடிக்கைகளால் வடக்கு— கிழக்குப் பகுதிகளிலிருந்து வெளியேறிய பலர் தமிழ்நாட்டுக்குச் சென்றிருந்தனர்.

இவர்கள் சென்ற படகுகள் தற்போது தமிழ்நாடு நாகபட்டணத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில்—

படகுச் சொந்தக்காரர் பலர் கப்பல் மூலம் திருப்பி அனுப்பப்பட்டு விட்டனர்.

அங்குள்ள முகாம்களில் தங்கியுள்ள ஏனைய இலங்கையரையும் திருப்பி அனுப்ப தமிழ்நாடு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஆனால் படகுகளை திருப்பி அனுப்ப இன்னும் அனுமதிக்கப்படவில்லை. (இ-5)

## முச்சக்கரவண்டி அன்பளிப்பு

யாழ். பொது மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த மல்லாகத்தைச் சேர்ந்த திரு. துரைராசா ஆனந்தராசா எனும் குடும்பஸ்தருக்கு நோயாளர் நலன்புரி சங்கம் முச்சக்கரவண்டி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளது. இவ் வண்டியை யாழ். பொது மருத்துவமனைப் பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணம் நோயாளர் நலன்புரி சங்க அலுவலகத்தில் வைத்து வழங்கினார். (க-14)

**மரமேஉன்னடி நிழல்-என் மன நிம்மதி**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஐயன் - இரத்தினம்

காலம்சென்ற கதிரன் - ஐயன் அவர்களுடைய மனைவியும், பரமேஸ்வரி, நாகராசா, காலம்சென்ற கந்தசாமி, புனிதவதி, பரிமளம் ஆகியோரின் அன்புத் தாயாரும், வேலாயுதம், காலம்சென்ற சரஸ்வதி சிவலிங்கம், இராசரத்தினம் [யாழ். மருத்துவ பீடம்] ஆகியோரின் அன்பு மாமியாரும், பரிபாலினி, சண்முகபதி, சியாமளா [உதயன் பத்திரிகை நிறுவனம்], சசிகுமார், சங்கீதா, நேருஜா, ஜெகாரூபி, பார்த்திபன், கார்த்திபன் ஆகியோரின் பேர்த்தியும், சிந்துஜா, டெல்சியா, சோபிதா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரினது பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து கோண்டாவில் கிழக்கு கொட்டைக்காடு மயானத்துக்கு இன்று [2 - 02 - 1995] வியாழக்கிழமை காலை 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஐ. இராசரத்தினம்
[மருமகன்]

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். [34986]

---

அருட்தந்தை
## அன்ரன் இராஜகாரியர்

யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை அன்ரன் இராஜகாரியர் 1 - 2 - 95 இல் காலமாகிவிட்டார். இவரது நல்லடக்க ஆராதனை யாழ். மரியன்னை பேராலயத்தில் இன்று (2 - 2 - 95) வியாழன் மாலை 3.30 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யாழ். ஆயரின் செயலர்
அருட்திரு து. தவராஜசிங்கம்

(34990)

---

பொறியியல் கலாநிதி
## செந்திவேல்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவரும், கனடாவில் வசித்து வந்தவருமான பொறியியல் கலாநிதி செந்திவேல் கடந்த சனி அன்று (28-1-95) இல் கனடாவில் காலமானார்.

அன்னார் எட்வேட் தங்கவடிவேல் யோகநாயகி தம்பதியரின் மூத்த மருமகனும், வசந்தாவின் அன்புக் கணவரும். மாதவன், ரவி ஆகியோரின் அன்புத் தந்தையும்ஆவார். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

தகவல்:
எட்வேட் தங்கவடிவேல் இராஜ்குமார்
(மைத்துனர்)
குமரன் ருறிஸ்ட்இன்
67, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கிழக்கு தெரு,
வல்வெட்டித்துறை. (34984)

---

திருமதி
## கனகரட்ணம் இராஜலட்சுமி

அத்தியடி, கல்வளவைச் சேர்ந்த திரு. திருமதி தங்கவேலு தம்பதிகளின் மகளும், ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகஸ்தர் அ. கனகரட்ணத்தின் அன்பு மனைவியுமான இராஜலட்சுமி கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் ஸ்ரீஸ்கந்தராசா [சமக்கோன் லிமிட்டெட் கொழும்பு], ஸ்ரீதரன் [சரங்கா ஏஜென்சி யாழ்ப்பாணம்], சிறிந்திரன் [ஜேர்மனி], ஸ்ரீஸ்வரன், கணேசலிங்கம் (ஒடிற்றிங் கொம்பனி, கொழும்ப) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயந்திதேவி [ஆசிரியை, கொழும்பு], கலாமலர் (ஆசிரியை, அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற முத்துவேலுப்பிள்ளை, மற்றும் பராசத்தி, சுவாமிநாதர், பரமேஸ்வரி, சோமசுந்தரம், மகேஸ்வரி ஆகியொரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று 1.2.95 இல் கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
அ. கனகரட்ணம்
[கணவர்]

புதிய செம்மணிச் சந்தி,
நல்லூர் வடக்கு,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். [34988]

---

## தம்பர் சேனாதிராஜா
மல்லாகம்
[ஓய்வு பெற்ற நீதி மன்ற மொழிபெயர்ப்பாளர்]

தம்பர் சேனாதிராஜா காலமானார்.

அன்னார் அமரர் பாக்கியவதியின் அன்புக் கணவரும் அமரர்கள் தம்பர் சின்னத்தங்கம், தம்பதியரின் மகனும் சுபத்திராதேவி (ஆசிரியர் இராமநாதன் கல்லூரி மருதனா மடம்) நாகேந்திரன் (இலங்கை மின்சார சபை), இராஜராஜேஸ்வரி, ரங்கநாயகி, ரமணி, ஜெயந்தி [கனடா], வசந்தி [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தந்தையும், செ விவேகானந்தன் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் விவசாயத்திணைக்களம), வள்ளிநாயகி, கு கந்தசாமி [ஓய்வு பெற்ற கிராமசேவையாளரும், சிவாகப்பதிவாளரும்], த. சிறீஸ்கந்தராஜா [கனடா], ந. நித்தியானந்தன் [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமனாரும், அமரர்கள் தியாகராஜா, செல்லம்மா, நடராஜா, திருமதி சு. சிவக்கொழுந்து (அவுஸ்ரேலியா), சுந்தைமா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுதாகரன், விவேகா (யாழ். பல்கலைக் கழக கணிதபீடம்] ரவிசங்கர் [பிரான்ஸ்], அனுஷியா (ஆசிரியை மன்னார் புனித சவேரியார் பெண்கள் மகா வித்தியாலயம்], அகல்யா, உமாசங்கர் [கனடா], ஜீவசங்கர் [கனடா], ராகுலன், கோகுலன், மாதங்கி, கஜனன், மயூரன் [கனடா], ஆரூரன் [கனடா], செந்தூரன் [ஜேர்மனி], நிதர்ஷன் (ஜேர்மனி], நித்தியா [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு பேரனும் ஜெனோர்த்தனன் [பிரான்ஸ்], அவிஷந் [பிரான்ஸ்], கோபிசந்தர், விபூஷா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 02-02-95) வியாழக்கிழமை பகல் 1-00 மணியளவில் நீதிமன்ற வீதி [கலட்டி கனிஷ்ட பாடசாலைக்கு அருகில்] மல்லாகத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சே நாகேந்திரன்
[மகன்]

மல்லாகம். (34993)

---

யாழ்.மாவட்டத்தில்

# கால்நடை அபிவிருத்திக்கு ஆறு அம்சத் திட்டம்

## அரச அதிபர் கொழும்பில் பேசி ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ். மாவட்டத்தில் கால்நடை அபிவிருத்திக்காக ஆறு அம்சத் திட்டம் ஒன்று அமுல் செய்யப்பட இருக்கிறது.

யாழ். அரச அதிபர் திரு க. பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கால்நடை, கிராம அபிவிருத்தி அமைச்சு அதிகாரிகளுடன் கொழும்பில் பேச்சு நடத்தி இந்த திட்டத்தை செயற்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

உத்தேச ஆறு அம்சத் திட்டம் வருமாறு;

★ சினைப்படுத்தும் செயற்பாடுகளை ஆரம்பித்தல்.

★ நல்ல இனத்தைச் சேர்ந்த கோழிக்குஞ்சுகளைத் தருவித்தல்.

★ பசுக்கன்றுகளை பராமரித்து வளர்த்தல்.

★ நல்ல இன ஆடுகளைப் பெறல்.

★ கால்நடை சங்கங்களை அமைத்தல்.

★ கால்நடை உணவுவகைகளை சேகரித்து சேமித்தல்.

இந்த திட்டங்கள் குறித்து கால்நடை அதிகாரிகளுடன் ஆராய்ந்து உடன் நடைமுறைப்படுத்தப்பட இருப்பதாக அரச அதிபர் மேலும் தெரிவித்தார். [ஒ-3-7]

---

# தற்கொலையாளிப் பெண் அரியாலையை சேர்ந்தவர்

## பொலீஸ் மா அதிபர் தகவல்

காமினி திஸாநாயக்க கொலைக்குக் காரணமாக இருந்த குண்டு வெடிப்பில் ஈடுபட்டவர் அரியாலையைச் சேர்ந்த புஷ்பமலர் என்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளதாக பொலீஸ் மா அதிபர் அறிவித்தார்.

காமினி திஸாநாயக்கா கொலை தொடர்பான புதிய தகவல்களை நேற்று நடந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் மாநாட்டில் பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வா வெளியிட்டார்.

அவர் அங்கு தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

கொலையாளிக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப்பதாகச் சந்தேகிக்கப்படினும் அது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் கொலை தொடர்பாக ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ள ரவி என்பவருக்கு காமினியின் படுகொலையுடன் தொடர்பு இருப்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தின் சூத்திரதாரி எனக் கருதப்படும் தற்கொலையாளியான புஷ்பமலர் என்ற பெண்ணுடன் ரவி தொடர்பு கொண்டிருந்தவர் என்ற தகவல்கள் கிடைத்துள்ளன

தற்கொலையாளியான புஷ்பமலர் அரியாலையைச் சேர்ந்தவர் அவரது கணவர் தற்பொழுது கைது செய்யப்பட்டுள்ளார்.

புஷ்பமலரின் வாயினுள் சயனைட் காணப்பட்டதாக ஸ்கொட்லண்ட்யார்ட் விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதனால் காமினி திஸாநாயக்காவின் கொலையுடன் விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பு இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. ஆனால் அதை உறுதிப்படுத்துவதற்கு இந்தச் சான்று மட்டும் போதுமானதல்ல.

தற்கொலையாளியான புஷ்பமலர் என்ற பெண் உடலில் சயனைட் விஷம் கலந்ததால் மரணமடையவில்லை என்றும் ஸ்கொட்லண்ட்யார்ட் விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலையாளியான புஷ்பமலரின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக அவரது இரு சகோதரிகளின் இரத்தம் பரிசோதனைக்காக ஸ்கொட்லண்ட்யார்ட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளது. (ஒ-ஐ-6)

---

### கொழும்புக்கு..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்வது சம்பந்தமான கூட்டம் ஒன்று எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளும். பிரதேச செயலர்களும் கலந்து கொள்வர்.

கொழும்புக்கு அனுப்பக்கூடிய கருவாட்டின் அளவை யாழ். மாவட்ட மீன்பிடி அபிவிருத்தி அதிகாரி திரு. யோசேப் சேகரிக்கவுள்ளார். [ஒ-3-7]

### தீர்வு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மைப்பு வழங்குமுகமாகவே தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் ஐவரும் நாடாளுமன்றத்தில் அரசுக்கு ஆதரவு அளித்து வருகின்றனர்.

ஆனால் இன்று அரசின் சமாதான முயற்சியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது போல் தோன்றுகிறது. இந்நிலை நீடித்து தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சி இழுத் தடிக்கப்பட்டால் அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை விலக்கிக் கொள்வதைத் தவிர கூட்டணிக்கு வேறு வழி கிடையாது.

ஆதரவை விலக்கிக் கொள்வதோடு மட்டும் நின்று விடமாட்டோம். அரசைஎதிர்த்து வாக்களிப் போம்.

அபிவிருத்தி இப்போது முக்கியமில்லை. தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப் படவேண்டியதே முக்கியம்.

— இவ்வாறு ஜோசப் பரராஜசிங்கம் எம். பி மேலும் தெரிவித்தார். (ஒ ஐ)

### இருதரப்பு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் — ராஜன் ஆசிர்வாதம் மேலும் தெரிவித்தார்.

தற்போது அமுலில் உள்ள மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் 71 மணித்தியாலத்துக்குள் எத்தரப்பும் ஆட்சேபிக்காத பட்சத்தில் தானாகவே நீடிப்பதற்கு ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே. (இ)

### சமாதானப் பேச்சின்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சகோதரர்களில் ஒருவரான ஜெயந்தா ஞானக்கோனின் மனைவி அண்மையில் கொழும்பு வந்திருந்தார் என்றும்—

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் மேலதிக செயலாளர் பத்மா மகாராஜாவை இவர் சந்தித்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ]

### சமாதானப்---

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வது:-

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுக்கள் இடைநிறுத்தப்படாமல் தொடர்ந்து நடத்தப்படும்.

நான்காம் கட்டப் பேச்சுக்கான திகதியை விடுதலைப் புலிகளிடமிருந்து அரசாங்கம் எதிர்பார்த்து நிற்கிறது.

போர் இடைநிறுத்தத்தைக் கண்காணிக்கும் குழுக்கள் இன்னமும் அவற்றின் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவில்லை.

இந்தக் குழுக்களில் அங்கம் வகிக்கும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளை சந்திக்க விடுதலைப் புலிகள் விருப்பம் தெரிவித்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

இந்தச் சந்திப்புக்கான திகதி பற்றியும் விடுதலைப் புலிகள் இன்னமும் அறிவிக்கவில்லை.—என்றார்.

சமாதானப் பேச்சுக்கள் தாமதிப்பதற்குக் காரணம் என்ன என்று செய்தியாளர்கள் துருவித் துருவக் கேட்டபோதிலும் மேலதிக விவரங்கள் எதனையும் தெரிவிக்க முடியாது என அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா மறுத்து விட்டார்.

### ஆசிரியருக்கு---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சம்பளப் பட்டியல் வேலைகள் ஜனவரி மாதத்துக்குள் முடிவடையாத காரணத்தால் இந்த மாதத்துடன் புதிய சம்பளத்தை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் —

ஆசிரியர்களை தரம்பிரித்து அவர்களுக்கு ஏற்ற சம்பளப் பட்டியல் தயாரிக்கும் வேலைகள் தற்போது மும்முரமாக நடைபெற்று வருகின்றன என்றும் — அமைச்சர் தெரிவித்தார். [ஒ-3]

---


யாழ். றோட்டறிக் கழகம்

# அதிதி பேச்சாளர் தினம்

காலம்: இன்று [02 – 02 – 95]
மாலை 4 30 மணி

இடம்: ஞானம்ஸ் ஹோட்டல் யாழ்.

அனைத்து இன்ரறக்ட், றோட்டறக்ற் கழகத் தலைவர், செயலாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இளைஞர் சேவை,
இயக்குநர்

[சி-485]



சுன்னாகம் ஐயனார் ஆலய

# வருடாந்த மகோற்சவம் 1995

எதிர்வரும் 7 - 3 - 1995 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள வருடாந்த மகோற்சவம் சி. ஐ. சந்தசாமி ஆகிய எனது உரிமைக்காலத்தில் நடைபெறவிருப்பதனால் உபயகாரர்களும் அடியார்களும் என்னுடன் தொடர்பு கொண்டு ஆதரவு நல்கி விழாவை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சி. ஐ. கந்தசாமி
ஆதீன கர்த்தாவும், பூசகரும்,
காவல்துறை ஆலய விசேட விசாரணைப்பிரிவு ஆணைப்படி.

[7888]



யாழ்ப்பாணக் கல்லூரி
# பட்டதாரிப் பிரிவு
464, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## விரிவுரைகள் ஆரம்பம்

1. தொடர்பாடற் கற்கை நெறி (Communication Studies)
   மேற்படி கற்கை நெறிக்கான விரிவுரைகள் எதிர்வரும் 04 - 02 - 1995 சனிக்கிழமை முற்பகல் 11-30 இற்கு ஆரம்பமாகும். நிரந்தர நேர அட்டவணை பற்றி கலந்தாலோசிக்கலாம். விண்ணப்பித்தவர்களும், கலந்து கொள்ள விரும்புபவர்களும் சமுகம் தரவும் (விவரங்கள் 21 - 01 - 1995 உதயனில்)
2. நாடகமும் அரங்கியலும்:
   G. A. Q. விற்கான விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
   செவ்வாய், வியாழக்கிழமைகளில் பிற்பகல் 4மணி தொடக்கம் 5மணி வரை.
   விரிவுரையாளர்:
   திரு. ம. சண்முகலிங்கம்
3. மொழியியல் (Linguistics)
   G. A. Q. - 96இற்கான விரிவுரைகள் விரைவில் ஆரம்பமாகும். கலந்து கொள்ள உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.
4. க. பொ. த. (உயர்தரம்) வகுப்புக்கான ஆங்கில இலக்கியம் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

[சி-340]


---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னம்மா அருளம்பலம்
[அல்லைப்பிட்டி]

திருமதி அன்னம்மா அருளம்பலம் காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி அருளம்பலத்தின் அன்பு மனைவியும், அனந்தநாயகி [வனஜா] [அதிபர் யா / அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்], வசந்தா [U. K], சிறிகாந்தன் [U. K], ஜெயகாந்தன் [France], ஜெயவாணி ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்முகானந்தன் [நில அளவைப் படவரைஞர்], செல்வநாயகம் [சட்டத்தரணி - U. K ], கிரிஜா [U. K], கிருபாநிதி [France] ஆகியோரின் மாமியாரும், ஆர்த்தி, திவ்யா, அருண், அர்ச்சனா, பிரணவன், பிரவீனன், பிருந்தா ஆகியோரின் பேர்த்தியாரும், இராசம்மா [ஓய்வுபெற்ற ஆசிரியை, மண்டைதீவு], செல்லம்மா [ஓய்வுபெற்ற ஆசிரியை ஏழாலை], நடராசா காலஞ்சென்ற தியாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 1 - 2 - 95 புதன் கிழமை நடைபெற்றன. என்பதை உற்றார். உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
நா. சண்முகானந்தன்
[மருமகன்]

45, செட்டித்தெரு,
நல்லூர். [34995]

---

## சின்னத்துரை நித்தியானந்தவேல்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற எழுதுவினைஞரும், நெடியகாட்டுத் திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவில் பரிபாலன சபைத் தலைவருமாகிய சின்னத்துரை நித்தியானந்தவேல் அவர்கள் 30- 1- 95 அன்று சிவபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்துரை - அன்னஜானகி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், திரு. திருமதி நமசிவாயம் தம்பதிகளின் மருமகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், அமிர்தவல்லி, சுந்தரவல்லி (கனடா), கிருபானந்தமூர்த்தி (மின் அத்தியட்சகர் தலைமைக் காரியாலயம், கொழும்பு), சரவணபவன் (பொறியியலாளர், லண்டன்), தண்டாயுதபாணி [யாழ். மருத்துவபீட மாணவன்], கணநாதன் (பல்கலைக்கழகக் கல்லூரி மாணவன் ஊவா மாகாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காயத்திரி, கஸ்தூரி ஆகியோரின் பேரனும், சுந்தரலிங்கம், றங்கராஜன் [கனடா] ஆகியோரின் மாமனாரும், சதானந்தவேல், பரமேஸ்வரி, தாயுமானவர், மகாலட்சுமி, கணேசமூர்த்தி ஆகியோரின் சகோதரரும், திருநடராஜா, காலஞ்சென்ற டாக்டர் தர்மலிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (1-2-95) மாலை 5 மணிக்கு ஊறணி மயானத்தில் நடைபெற்றன என்பதை அறியத்தருகின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கி. கிருபானந்தமூர்த்தி
(மகன்)

செம்பாடு,
வல்வெட்டித்துறை [34996]

---

# OBITUARY

Rev. Fr.

## ANTON RAJAKARIER

Dearly beloved son of the late Advocate Regis and Kithamma Rajakarier of 79, Main Street, Jaffna, affectionate brother of Mrs. Teresa Saundranayagam (Canada), Rev. Fr. Joseph (Bangalore) and late Angelo, Lenie, Cecil and Joy and Uncle of Fr. Michael Saundranayagam (Rome) Expired Funeral Service on Thursday 02 - 02 - 1995 at 3-30 p.m. at St. Mary's Cathedral, Jaffna.

Informant;
Miss Jessa Tambinayagam

115, 3rd Cross Street,
Jaffna. (34991)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினரால் [illegible] இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 02 - 02 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org